Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

AUG 2004




# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–20 | 04–08–2004 | புதன்கிழமை | ஓசை –168

## பட்டதாரிகளின் மறியலால் கிளி.செயலகம் செயலிழந்தது



(அலுவலக செய்தியாளர்)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கிளிநொச்சி மாவட்ட பட்டதாரிகளுக்கு பட்டதாரி நியமனத்தில் புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டதனைக் கண்டிக்கும் முகமாக கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினரால் நேற்று கிளிநொச்சி அரச செயலகம் முன்பாக மறியல் போராட்டம் மேற்கொள்ளப்பெற்றது. இதன் காரணமாக செயலக நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்ததுடன் மறியல் போராட்டத்தின் முடிவில் சனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கான மகஜரும் கையளிக்கப் பட்டது.

நேற்றுக் காலை 8.00 மணியளவில் கிளிநொச்சி அரசசெயலக நுழைவாயில் பகுதியில் திரண்ட கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் அரச அதிபர் மற்றும் அரசசெயலக ஊழியர்கள் செயலக வளாகத்தினுள் செல்ல முடியாதவாறு வாசல் கதவினை பூட்டி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக அரசசெயலக பணிகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன.

கிளிநொச்சி மாவட்டவேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கையினை உடன் மேற்கொள்ள வேண்டுமெனவும் இதற்கான உத்தரவாதத்தினை ஓரிரு தினங்களில் அறியத்தர வேண்டுமென்ற கோரிக்கைகளை முன்வைத்து இம்மறியற் போராட்டம் இடம்பெற்றது.

நேற்றுக் காலை அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் தனது வாசஸ் (12ஆம் பக்கம் பார்க்க)

# இ.த.அ.சபை குறித்துப் பேச்சு நடத்த தயாரென நான் ஒருபோதும் கூறவில்லை!

## ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் சந்திரிகா

**தாம் ஒரு போதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக கூறவில்லையென சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார். நேற்றுமுன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கத்தின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் சனாதிபதி செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

இதன் போது சனாதிபதி, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தால் அடுத்த கணமே தமது கட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச குறிப்பிட்டமை தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் பிரச்சினையை எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த மக்கள் விடுதலை முன்னணியினர், இடைக்கால நிர்வாகம் குறித்து அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்களுக்கும், நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கேசனின் கருத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்பட்டமையை அடுத்தே தாம் அவ்வாறான கருத்தை கூற வேண்டியேற்பட்டது எனத் தெரிவித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. வேலையற்ற பட்டதாரிகள் இன்று அரச செயலகம் முன் மறியல்

முல்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் தற்போது அரசினால் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறி வித்துள்ளனர். இன்று முல்லை அரச செயலகத்தை முற்றுகையிட்டு அதன் செயற்பாடுகளை ஸ்தம்பிதம் அடையச் செய்து தமது எதிர்ப்பை அரசுக்குத் தெரியப்படுத்துவதாக முல்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

-கோப்பாய் பருத்தித்துறை வீதியில்-

## ஹன்டர் வாகனம் மோதியது துவிச்சக்கர வண்டியில் சென்றவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற ஹன்டர் - துவிச்சக்கர வண்டி விபத்தில் துவிச்சக்கர வண்டியை ஓட்டி வந்தவர் தலைசிதறிப் பலியாகியுள்ளார். நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் பருத்தித்துறை வீதியில் உள்ள கோப்பாய் றோமன் கத்தோலிக்கத் தேவாலயத்திற்கு அருகில் இடம்பெற்ற இவ் விபத்தில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பூ.நவரட்ணராஜா (வயது-43) என்பவரே பலியானவராவார்.

வடமராட்சிப் பகுதியில் இருந்து சட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான நடவடிக்கையில் அரசுக்கு ஆதரவு வழங்குவதிலிருந்து விலகுகிறோம்

### - எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி சமாதானச் செயற்பாடுகளில் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதென்ற நிலைப்பாட்டில் இருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சரான அநுர பண்டாரநாயக்கவும் மக்கள் விடுதலை முன்னணியினரும் சமாதான முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு தேவையில்லை எனத் தெரிவித்துள்ளதுடன் பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் சுமத்தியுள்ளமையை அடுத்தே இத்தீர்மானத்தை எடுத்ததாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகள் சிலவற்றிற்கு ஐக்கிய தேசியக் கட்சி இணங்கவில்லை எனவும்,

ஆனால், இடைக்கால நிர்வாக (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் இன்று மாபெரும் தமிழ் விழா

புதுக்குடியிருப்பில் இன்று மாபெரும் தமிழ்விழா ஊர்வலத்துடன் சிறப்புற இடம் பெற ஏற்பாடாகியுள்ளது.

இன்று மாலை 3.30 மணிக்கு ஊர்வலத்துடன் ஆரம்பமாகும் இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக முன்னாள் முல்லை மாவட்ட ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர், முல்லை மணி வே.சுப்பிரமணியம் அவர்களும், சிறப்பு விருந்தினராக விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களும், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு (12ஆம் பக்கம் பார்க்க)

## இல.துறைமுகங்களின் பாதுகாப்பிற்கு அமெரிக்காவுடன் புதிய ஒப்பந்தம்

### - அமைச்சர் மங்களசமரவீர தெரிவிப்பு

இலங்கைத் துறைமுகங்களின் பாதுகாப்புக்கு அமெரிக்காவுடன் பாதுகாப்பு புதிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட்டுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். ஏற்கனவே சர்வதேச நாடுகள் இலங்கைத்துறைமுகங்களின் பாதுகாப்பிற்கு துணைபுரிவதாக இணங்கியிருப்பதுடன் சர்வதேசரீதியிலான பாதுகாப்பிற்குள்ளும் இலங்கைத் துறைமுகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அமிரிக்காவுக்குச் சென்ற கடற்படைத்தளபதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாகவும், அதனால் பெரு நன்மை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்தின் மூலம் கடற்பிராந்திய பாதுகாப்பிற்கான கடற்படைத் தளபாடங்களை அமெரிக்கா இலங்கைக்கு இலவசமாக வழங்கும் என்பதும் முக்கியமானது என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

## தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளரிடம் இருந்து வழிநடத்தல் குறித்து கற்றுக்கொள்ளமுடியும்

### சிறிலங்காப் பொலிசாருக்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே அறிவுரை

"தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு.நடேசன் அவர்களின் தலைமையின் கீழ் உத்தியோகத்தர்கள் வழிநடத்தப்படுவதில் இருந்து சிறிலங்காப் பொலிசார் கற்றுக்கொள்ள முடியும்." என சிறிலங்காவின் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே புகழ்ந்துரைத்துள்ளார்.

சிறிலங்காப் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வு தொடர்பான விவாதத்தில் ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விவாதத்தில் முன்னாள் ஐக்கியதேசிய முன்னணியின் உள்நாட்டலுவல்கள் அமைச்சரான ஜோன் அமரதுங்க சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினால் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பதவியுயர்வுகள் குறித்து கவலை வெளியிட்டுள்ளார்.

போதை மருந்து வியாபாரத்தில் தொடர்புபட்டிருந்த நேர்மையற்ற (12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பெயர் மாற்றம்

கிளிநொச்சி மாயவனூர் வட்டக்கச்சியைச் சேர்ந்த தங்கவேலு காளியம்மா ஆகிய நான் 03.08.2004 இன்று முதல் எனது பெயரை தங்கவேலு கலைச்செல்வி எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகிறேன்.
த.கலைச்செல்வி. (4873)

### விசேட செயலமர்வு

கேம்பிறிஜ் கல்லூரி, உதய நகர்,இல-01. 2004 ஒகஸ்ட் 15ஆம் திகதி தரம்-05 புலமைப் பரிசிலுக்கு தோற்ற இருக்கும் மாணவர்களுக்கான விசேட செயலமர்வு 2004-08-07ஆம் திகதி சனி (காலை 9.00 மணிக்கு) நடைபெறும் இதில் சகலரும் கலந்து பயன்பெறவும். கட்டணம் 150/= நிர்வாகம். (4649)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
02 ◻ 03 ◻ 1993

மறைவு
04 ◻ 08 ◻ 2001

அமரர்

### செல்வநாயகம் கபாஸ்கர்

மூன்றாண்டு போனதைய்யா
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
நூறாண்டு போனாலும் நீங்காது
உங்கள் நினைவு.

நி.மு
பலாலி கிழக்கு
வசாவிளான்,
த.மு
129/1 விசுவமடு மேற்கு
விசுவமடு

என்றும் உன்
நினைவில் வாடும்
செல்வநாயகம்
குடும்பத்தினர்.

(4874)

### விளையாட்டுப்போட்டி

முல்லை.மாவட்ட கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி இன்றும் நாளையும் நடைபெறும் முன்பு இவ் விளையாட்டுப் போட்டி நடைபெற இருந்த போதும் சில தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. இதில் 5 பிரதேச செயலர் பிரிவில உள்ள விளையாட்டுககழகங்கள பங்குகொள்ளவுள்ளனா. (20)

### உழவு இயந்திரங்கள் தடுத்துவைப்பு

மன்னாரில் மணல் அகழ்வில் ஈடுபடும் உழவு இயந்திரங்கள் மணல் அகழ்வு செய்யும் நேரங்களின் ஒழுங்கை பேணவேண்டுமென உழவு இயந்திர உரிமையார்களுக்கு உழ்வு இயந்திர உரிமையாளர் சங்கம் அறிவித்தல் விடுத்தபோதிலும் அவர்கள் ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மாறாக மணல் ஏற்றியதன் காரணமாக 10 உழவு இயந்திரங்கள் மன்னார் பொலிசாரால் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (மி)

### எக்ஸ்றே இயந்திரம் இன்மையால் பாதிப்பு

மன்னார் வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையிலிருந்து பொது வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டு மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஆனால் வைத்தியசாலையில் எக்ஸ்ரே எடுக்கும் கருவி கடந்த நாட்களாக இயங்காத காரணத்தினால் சில நோயாளிகளுக்கு உடன் வைத்தியம் செய்யமுடியாதுள்ளதெனவும் மன்னார் வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதனை உரிய இடங்களிற்கு அறிவித்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் இதனால் பலபாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (மி)

## வாழ்த்துகிறோம் தமிழ்விழாவை

முல்லை கல்வி வலயத்தில் சொல்லவல்ல தமிழ் விழா எல்லோரும் சேர்ந்துகொண்டு நல்மொழியை வாழ்த்துவோம்.

ஊர்தி அரங்கமென
வாரி தமிழை அணைத்து
பாரிபோல் கொடைசெய்யும்
காரியத்தை வாழ்த்துகிறோம்.

வர்த்தகர் சங்கம்,
புதுக்குடியிருப்பு.

(சி-9174)

## சாவு அறிவித்தல்



### செல்லையா காத்தலிங்கம்

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இல.19/2 புத்தடி விஸ்வமடுவை வசிப்பிடமாக கொண்டவரான செல்லையா காத்தலிங்கம் சுகவீனம் காரணமாக காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற செல்லையாவினதும் திருமதி செல்லையா இராசம்மாவின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், தயாபரன், தர்சினி, நிர்மலன் ஆகியோரின் தந்தையும், கணபதிப்பிள்ளை, நாகம்மா, செல்லாச்சி காத்தலிங்கம் காலம் சென்ற பத்மநாதன், சண்முகானந்தம், வாரித்தம்பி, புஸ்பராணி அருளம்பலம் ஆகியோரின் சகோதரரும் ஆவார். இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
திருமதி
வி.கேதணி குடும்பத்தினர்

(4876)

## முக்கிய அறிவித்தல்

யுத்த அனர்த்தங்களினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வன்னிப்பிரதேச மக்களையும், வன்னியூடாக வடக்கு,தெற்கு நோக்கிப் பயணிக்கும் ஏனைய பகுதி மக்களையும் கண்ணிவெடி ஆபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு முக்கியமாக வன்னியை ஊடறுத்துச் செல்லும் A-9 நெடுஞ்சாலையிலும் மற்றும் பாதிப்புக்குள்ளான பகுதிகளிலுள்ள வீதிகளிலும் கண்ணிவெடி, வெடிபொருள் ஆபத்துக்கள் சம்பந்தமான அறிவிப்புப் பலகைகளை நிறுவிப் பராமரித்து வருகின்றோம். இவ்விதமான மனிதநேயப் பணிகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் எமக்கு கிடைக்கப்பெற்ற நிதிஉதவிகளுடன் எமது மூலவளங்கள், மனிதவலு ஆகியவற்றின் இணைந்த செயல்பாட்டினாலேயே நடைபெற்று வருகின்றது.

இப்பணிகளின் உன்னதமான பிரயோசனங்களை பகுத்துணர முடியாத சில சுயநலவாதிகள் தங்களின் சொந்தத் தேவைகளுக்காக இந்த அறிவிப்புப் பலகைகளை திருடிச் செல்கின்றனர். இது மிகவும் இழிவான செயல் மட்டுமல்ல, மன்னிக்கமுடியாத குற்றமுமாகும். ஒரு நான்கடிச் சதுரமான தகரத்துண்டினதும், இரண்டு இரும்புக் குழாய்களினதும் பெறுமதியினைவிட அவற்றின் காரணமாக எத்தனையோ மனித உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன என்ற மகத்தான உண்மையினைக் குறைவாக மதிப்பிடும் மிலேச்சத்தனமான செய்கைகளினின்றும் விலகியிருக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். எனவே இவ்வாறான திருட்டு வேலைகளில் ஈடுபடுபவர்கள் இனிமேலாவது எமது மக்களின் பாதுகாப்புக்கருதி அறிவிப்புப் பலகைகளைத் திருடுவது போன்ற சமூகவிரோத செயல்களைச் செய்யாது எச்சரிக்கை அடையவேண்டும்!என்பதே இவ்அறிவித்தலின் முக்கிய நோக்கமாகும். அனேகமாக இயக்கச்சி தொடக்கம் முகமாலை வரையிலான பகுதிகளிலேயே இவ்விதமான நாசவேலைகள் இடம் பெறுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. இப்பிரதேசங்களிலுள்ள பொது அமைப்புக்கள், நலன் விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த மோசமான செயல்களை நிறுத்துவதற்கு எம்முடன் ஒத்துழைக்க வேண்டுமெனவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

கண்டி வீதி
கிளிநொச்சி

**வெண்புறா நிறுவனம் - வன்னி**

(சி-9769)

# ஈராக்கில் பணிபுரிய துருக்கிய சாரதிகள் ஆட்சேபம் 300 றக் வண்டிகள் எல்லைப்புறத்தில் நிறுத்தி வைப்பு

**-கடத்தப்பட்ட துருக்கிய சாரதி தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை**

**(இஸ்தான்புல்)**

**ஈராக்கிலுள்ள துருக்கியின் சாரதிகள், அமெரிக்கப்படையினருக்கு தேவையான உணவு முதலியவற்றை எடுத்துச் செல்வதற்கும், அமெரிக்க கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பணிபுரிவதற்கும் ஆட்சேபம் தெரிவித்து நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.**

ஈராக்கின் துருக்கியப் பகுதியில் வைத்து துருக்கிய சாரதிகள் பலரும் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு வருவதால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக சாரதிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எல்லைப் பகுதி புல்வெளிக் கிராமங்களில் வைத்தே வெளிநாட்டு றக் வண்டி சாரதிகள் கடத்தப்படுகின்றனர்.

இதனால் தாமும் கடத்தப்படாலம் எனும் அச்சம் துருக்கிய சாரதிகளிடம் ஏற்பட்டுள்ளது. ஈராக்கிற்கு உள்வரும் துருக்கி எல்லைப்பகுதியின் பாதை ஓரமாக சுமார் 300 றக் வண்டிகள் நேற்றுக்காலை தொடக்கம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட துருக்கியர்களில் ஒருவர் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டுள்ளமை இணையத்தளம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

ஈராக்கில் அமெரிக்க கூட்டணிப்படையினருடன் இணைந்து துருக்கி நிறுவனமும் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்நிலையில் தான் துருக்கி நிறுவனம் உடனடியாக வெளியேற வேண்டும் என்று துருக்கியர்கள் இருவர் கடத்தப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமையுடன் துருக்கி நிறுவனத்துக்கு வெளியேற வழங்கப்பட்ட காலக்கேடுகள் முடிவடைந்துள்ளதுடன், துருக்கி நிறுவனமும் தீவிரவாதிகளுடன் பேச்சு வார்த்தை எதுவும் நடத்த முன்வராத நிலையில் நேற்று முன்தினம் துருக்கியரான மொறிஸ் லூயிஸ் என்பவர் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்படுவதை தீவிரவாதிகள் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளனர்.

இதனையடுத்து துருக்கிய அரசு தீவிரவாதிகள் பிடியிலுள்ள மற்றைய துருக்கியரைப் பத்திரமாக மீட்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறியுள்ளது.

அதன்படி ஈராக்கிலுள்ள துருக்கிய நிறுவனம் வெளியேற்றப்படும் என்றும் துருக்கிய அரசு கூறியுள்ளது.

### 4 ஜோர்தானியர் கடத்தல்

ஈராக்கில் தீவிரவாதிகள் ஜோர்தானைச் சேர்ந்த நான்கு பேரைக் கடத்திச் சென்றுள்ளனர். அண்மையில் மூன்று இந்தியர் உட்பட ஏழு வெளிநாட்டவர்கள் தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்டிருப்பது தெரிந்ததே.



குண்டு வெடிப்பு நடைபெற்ற பாக்தாத் கிறிஸ்தவ தேவாலயத்துக்கு வெளியில் காவலில் நிற்கும் அமெரிக்க இராணுவம்

# 3 இந்தியரும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள்

*இந். இணை அமைச்சர் நம்பிக்கை*

ஈராக் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுச் சிறை வைக்கப்பட்டுள்ள அந்தர்யாமி, திலக்ராஜ், சுக்தேவ் சிங் ஆகியோரை விடுவிக்கும் முயற்சியில் மீண்டும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதென இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் அகமது தெரிவித்துள்ளார். தீவிரவாதிகள் நியமித்துள்ள மத்தியஸ்தரான ஷேக் ஹிஷம் அல்-துலெய்மி-யுடன் மூன்று இந்தியர்களும் பணியாற்றும் குவைத் போக்குவரத்து நிறுவனம் திங்கட்கிழமை மீண்டும் தொடர்பை ஏற்படுத்தி பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது. இத் தகவலை அந்த நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ராணா அபு-ஜெய்னே குவைத்திலிருந்து பி.டி.ஐ செய்தி நிறுவனத்துக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தார். தீவிரவாதிகளின் கோரிக்கைகளுக்கு குவைத் போக்குவரத்து நிறுவனத்தைச் சம்மதிக்கச் செய்ய தம்மால் முடியவில்லை என்று கூறி, அதனால் மத்தியஸ்தம் செய்யும் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்வதாக அல்-துலெய்மி அறிவித்து விட்டார் என்று ஞாயிற்றுக்கிழமை வந்த தகவல்கள் கூறின. எனவே இந்தியப் பிணைக்கைதிகளைத் தீவிரவாதிகளிடமிருந்து விடுவிப்பதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கருதப்பட்டது. ஆனால் திங்கட்கிழமை அந்த முயற்சியில் மீண்டும் நம்பிக்கை துளிர்விட்டுள்ளது. குவைத் நிறுவன செய்தித் தொடர்பாளர் ராணா அபு-ஜெய்னே பிணைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பான பேச்சுவார்த்தை நம்பிக்கையூட்டும் வகையில் நடைபெற்றுவருகிறது. கடத்தல் காரர்களின் மத்தியஸ்தருடன் கே.ஜி.எல் (குவைத் கலப் லிங்க் போக்குவரத்து) நிறுவனம் சார்பில் மஹ்தி சலே பேச்சு நடத்தி வருகிறார். பிணைக்கைதிகளைக் கடத்திச் சென்றுள்ள "இஸ்லாமிய ரகசியப் படை-கறுப்புப் பதாகை ஏந்துவோர்" என்ற அமைப்பினரின் அனைத்துக் கோரிக்கைகளையும் எமது (குவைத்) நிறுவனம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. எமது நிறுவனத்தின் லாரிகளோ, பஸ்ஸோ ஈராக்கில் இப்போது இயக்கப்படவில்லை. எனவே, பிணைக்கைதிகள் அனைவரும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்றார் என அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# இந்திய முன்னாள் அமைச்சர் சிபுசோரனின் ஜாமீன்மனு தள்ளுபடி 14நாட்கள்நீதிமன்றக்காவல்

ஜார்க்காண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் சிபுசோரன் கடந்த திங்கட்கிழமை நீதி மன்றத்தில் சரணடைந்தார்.

ஜாமீனில் விடுவிப்பதற்காக அவர் தாக்கல் செய்த மனுவை நீதி மன்றம் தள்ளுபடி செய்ததுடன் அவரை 14-நாள் நீதிமன்றக் காவலில் வைக்கவும் உத்தர விட்டது.

ஜார்க்காண்ட் மாநிலம் ஜம்தாராவில் உள்ள மாவட்டம் மற்றும் செசன்ஸ் விரைவு நீதிமன்றத்தில் நீதிபதி உதய நாராயண் முன்னிலையில் சோரன் சரணடைந்தார்.

ஜம்தாரா மகளிர் கல்லூரியின் முதல்வர் அறையில் சிபுசோரனை தற்காலிகமாக வைத்திருக்கும் படியும் பின்னர் செவ்வாய்க்கிழமை ஹஸாரிபாக் சிறைக்கு கொண்டு செல்லும்படியும் நீதிபதி உத்தர விட்டார். இவ்வழக்குத் தொடர்பான விசாரணை வரும் 13-ஆம் திகதி தொடங்கும் என்று நீதிபதி கூறியுள்ளார்.

சிபுசோரன் சார்பில் கிரிதி மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு மனுவை நீதிபதி பிரதீப் குமார் தள்ளுபடி செய்துள்ளார். 1974-ஆம் ஆண்டு கொலை வழக்கு தொடர்பாக தலைமை ஜூடி ஷியல் மாஜிஸ்திரேட் 1981-இல் பிறப்பித்த கைது வாரண்டை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சோரன்சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தனக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள் எல்லாம் தனி மாநிலக் கோரிக்கை போராட்டத்தின் போது பதிவு செய்யப்பட்டவை என்பது சோரன் தரப்பு வாதம்.

இருப்பினும்,"நீதிமன்ற உத்தரவுகளுக்கு சோரன் ஒத்துழைக்கவில்லை".

இதனால் வழக்கு விசாரணை தாமதமாகியது. ஆகவே அவரது மனுவை நிராகரிப்பதாக, நீதிபதி தீர்ப்பளித்தார். முன்னதாக, 1975-ஆம் ஆண்டு சிருதி என்ற இடத்தில் நடைபெற்ற படுகொலை வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் என்று சிபுசோரனுக்கு எதிராக, ஜம்தாரா ஜூடிஷியல் மாஜிஸ்திரேட் ஜூலை 17-இல் ஜாமீனில் வெளி வரமுடியாத கைது வாரண்ட் பிறப்பித்திருந்தது.

இதைத்தொடர்ந்து மத்திய அமைச்சர் பதவியில் இருந்து சிபுசோரன் விலகினார் அதன் பின்னர் 10 நாட்களாக தலைமறைவாக இருந்து வந்தார். சோரன் சார்பாக அவரது வழக்கறிஞர்கள் ஜாமீன் கோரி மனுத்தாக்கல் செய்தனர். ஓகஸ்ட் 2-இல் (திங்கட் கிழமைக்குள்) நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் என்று ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்து அவர் சரணடைந்தார்.



வடகரோலினா கரையோரப் பகுதியில் நேற்று முன்தினம் மையம் கொண்டிருந்த "அலெக்ஸ்" என்ற புயலின் செய்மதிப் படம்.




நியுயோர்க்கின் பங்குச் சந்தைக் கட்டடம் உட்பட பிரபல கட்டடங்களை அல்-ஹைதா தீவிரவாதிகள் தாக்கப் போவதாக மீண்டும் கிடைத்த தகவலையடுத்து அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நியுயோர்க் நகர விசேட படைப்பிரிவினர் .

# குற்றப்பதிவு செய்யப்பட்டவர் தே.போட்டியிட தடைவிதிக்க சட்டதிருத்தம் கொண்டுவருக

*–இந்திய தே. ஆணையாளர் பரிந்துரை*

தேர்தலுக்கு 6 மாதங்களுக்கு முன்பு, கிரிமினல் வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட அல்லது நீதிமன்றில் குற்றப் பதிவு செய்யப்பட்டவர் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கும் வகையில் சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று மத்திய அரசுக்குத் தலைமைத் தேர்தல் ஆணையர் டி.எஸ் கிருஷ்ணமூர்த்தி பரிந்துரை செய்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு சமீபத்தில் அவர் அனுப்பிய பரிந்துரையில் ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கக்கூடிய ஒரு கிரிமினல் வழக்கில், ஒருவர் மீது குற்றப்பதிவு செய்யப்பட்டிருந்ததால் அவரைத் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் ஏற்கனவே வலியுறுத்தியிருந்தது. அதன் அடிப்படையில் தற்போது பரிந்துரை அளிக்கப்படுகிறது. அதன் படி கிரிமினல் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட அல்லது குற்றப்பதிவு செய்யப்பட்டவர் தேர்தலில் நிற்கத் தடை விதிக்க வேண்டும் எனினும் ஆளுங்கட்சியினர் அரசியல் ரீதியாகப் பொய் வழக்குப் போட்டு எதிர்க்கட்சியினரைப் பழிவாங்குவதைத் தடுக்க தேர்தலுக்கு 6 மாதங்களுக்கு முன்பு வரை பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் தொடர்புடையவரை மட்டுமே தடை செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் விசாரணைக் கமிஷன் விசாரணையில் ஒருவர் குற்றவாளி எனக் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவரைத் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்க வேண்டும். இதற்கு உரிய சட்ட திருத்தம் செய்ய வேண்டும். ஒரு நபர் ஒரு தொகுதிக்கு மேல் போட்டியிட தடை விதிக்கும் வகையில் சட்ட திருத்தம் கொண்டு வரவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாராளு. குழுக்களை எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பது முடிவுக்கு வரும்

## இந்திய மக்களவைத் தலைவர்

(புதுடில்லி)

பாராளுமன்ற குழுக்களை பாரதிய ஜனதா தலைமையிலான எதிர்கட்சிகள் புறக்கணிப்பது முடிவுக்கு வரும் என்று நம்புவதாக மக்களவைத் தலைவர் சோம்நாத் சட்டர்ஜி நேற்று செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். நேற்று அவரது இல்லத்தில் தம்மை சந்தித்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானியுடன் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியுள்ளார். இந்த பிரச்சினை தொடர்பாக ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கட்சிகளின் தலைவர்களிடமும் தாம் பேசவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# கிளி.வட்டக்கச்சி பிரதான வீதியில் போக்குவரத்து மேற்கொள்வதில் ஆபத்து!

## -பலமுறை முறையிட்டும் பயனில்லை

(அலுவலக செய்தியாளர்)

**பாரிய நீர்ப்பாசன வாய்க்காலுடன் அண்டியதாகவுள்ள கிளிநொச்சி-வட்டக்கச்சி பிரதான வீதி நீர் அரிப்பின் காரணமாக பாரிய சேதத்திற்குள்ளாகி வருகின்றமையினால் அவ்வீதியூடாக பயணிப்போர் பெரும் அச்சத்துடன் பயணங்களை மேற் கொண்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.**

கடந்த பல வ்ருடகாலமாக இந்த நீர்ப்பாசன வாய்க்காலின் கட்டுக்கள் அனைத்தும் சேதமடைந்து திருத் தப்படாதுள்ளமையின் காரணமாக நீர்ப்பாசன வாய்க்காலில் செல்லும் நீர் வீதிக்கரைப்பகுதியினை தின மும் அரித்துக்கொண்டு செல்வதன் காரணமாகவே மேற்படி வீதியின் கரையோரப்பகுதி நீரினால் அரிக் கப்பட்டு பாரிய சேதத்திற்குள்ளா கியுள்ளது.

இவ்வீதியின் அவல நிலை குறித்து பல தடவைகள் தெரி விக்கப் பெற்றிருந்தும் இதுவரை இதனை பூரணமாகத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாதுள்ளமையானது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக் கது.எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் மற்றும் நிறுவனத்தினர் உடன் நடவடிக்கையினை மேற்கொண்டு வீதி அரிப்பினைக் கட்டுப்படுத்த முன்வர வேண்டுமென மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

அத்தோடு, கிளிநொச்சி மாவட் டத்தில் வட்டக்கச்சி பிரதேசமே மக் கள் செறிவு கூடிய பிரதேசமாகும். இந் நிலையில் கிளிநொச்சி மாவட் டத்தின் மையப்பகுதியான நக ரத்தை வட்டக்கச்சியுடன் இணைக்கும ஒரேயொரு பிரதான வீதி நல்ல முறையில் புனரமைக்கப்படாதுள் ளமையும் மக்களிடையே மிகுந்த வேதனையையும், விசனத்தையும் ஏற்படுததியுள்ளமை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணர்வது அவசிய மாகும். குறிப்பாக ஏற்கனவே தார் வீதியாக இருந்த இந்தப் பிரதான வீதி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கிரவலிடப்பட்டு புனரமைக்கப்பட்ட போதிலும் தற்போது அது குன்றும் குழியுமாக காட்சி தருகின்றது என்பதுடன் வாகனப் போக்கு வரத்து செய்ய முடியாத நிலையும் எதிர்கொள்ளப்பட்டு வருகின்றமை யும் சுட்டிக்காட்டத்தக்கது. (சோ,கு)



பாதிப்புற்ற வீதியின் இருவேறு தோற்றங்கள்

### சிறப்பு மருத்துவ முகாம் இன்றும் நடைபெறும்

லண்டனில் இருந்து வருகை தந்திருக்கும் வைத்தியக் குழுவி னரால் அளம்பில் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையில் கடந்த திங்கட்கிழமை முதல் பொது மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. இது இன்றுவரை நடைபெறும். சிகிச்சை பெறவிரும் புவோா இம் மருத்துவ முகாமில் கலந்துகொண்டு சிகிச்சை பெறு மாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### -இரணை மடுக் குளத்தின்கீழ்-

# சிறுபோக நெற்செய்கைக்கான நீர்விநியோக கலந்துரையாடல்

இரணைமடுக்குளத்திற்கு கீழ் 2004 சிறுபோக நெற் செய்கை நீர் விநியோகம் தொடர்பான கலந்து ரையாடல் கடந்த 31ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடை பெற் றது. இக்கலந்துரையாடலில் இர ணைமடுக் குளத்தின் கீழ் உள்ள அனைத்துத் திட்டக்குழுப் பிரதிநிதி களும் கலந்து கொண்டனர்.

நீர் விநியோகம் தொடர்பாக தற் போது எழுந்துள்ள தவறான குழப் பங்கள் தொடர்பாக விரிவாக ஆரா யப்பட்டதுடன், இந்நீர் விநியோகம் தொடர்பான தவறான விமர்சனங்க ளையும், அத்துமீறல் நடவடிக்கை களையும் மேற்கொள்ள வேண்டா மென சகல விவசாயிகளையும் கேட்டுக் கொள்வதோடு, 2004 சிறு போகக் கூட்டத் தீர்மானத்தின்படி எதிர்வரும் 30-08-2004 வரை நீர் விநியோகம் சீராக நடைபெறும் என் றும் உறுதியளித்துள்ளார்கள்.

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை அணி மென்பந்து கிரிக்கெட் போட்டியில் வென்றது

முல்லை மாவட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையேயான அமரர்கள் எஸ்.எஸ். மயில்வாகனம், அன்னப்பிள்ளை நினைவான சுற்றுக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் முல்லைத்தீவு பொதுவிளையாட்டு மைதானத்தில் நடை பெற்றது!.முல்லை மாவட்ட உதைபந்தாட்டக்குழுத் தலைவர் வே.சிவனடியார் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை முல்லைமாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் கமல் ஏற்றினார்.

தொடர்ந்து 7குழுக்கள் இந்த மென்பந்துப் போட்டியில் கலந்து கொண்டன.

இறுதிப் போட்டியில் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கக்குழுவிற்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக் குழுவிற்கும் இடையில் நடைபெற்றது.

இதில் வீதி அதிகார அபிவிருத்திசபை அணி வெற்றி கொண்டது இவர்களுக்கான வெற்றிக் கிண்ணமும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (20)

### -இரவு வேளைகளில்-

# மின் விளக்கின்றி மிதி வண்டியில் பயணிப்போர் மீது நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

இரவு வேளைகளில் துவிச்சக்கர வண்டிகளில் மின் விளக்குகள் பொருத்தாமல் பயணிப்பவர்கள் மீது தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரி வினரால் சட்ட நடவடிக்கை எடுக் கப்படும்.

வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறைகளில் இதுவும் ஒன்று. இரவு வேளைகளில் துவிச்சக் கரவண்டியில் மின் விளக்கு இல் லாமல் பயணித்தால் விபத்துக் கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. இதனால் பல உயி ரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. பலர் காயப்பட்டுள்ளனர். இவ்வீதி விபத் துக்களை தடுத்து நிறுத்தி எமது மக்களின் உயிர்களையும், உட மைகளையும் பாதுகாக்கும் நோக் குடன் தமிழீழ காவல்துறை யினரின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (தீ)

# தாயகம் திரும்பும் அகதிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு உதவுக!

## -மன்னார் அரசாங்க அதிபர் கோரிக்கை

தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் இலகுவாகத் தாய கம் திரும்ப உள்ளூர்ப் படகுகளைப் பயன்படுத்திப் போக்குவரத்து வச திகளை ஏற்படுத்தித் தருமாறு மன் னார் அரசாங்க அதிபர் யு.என்.எச்.சி. ஆர்.இடம் கோரியுள்ளார்.

தமிழகத்திலுருந்து தாயகம் திரும்பிக் கொண்டிருக்கும் மக்கள் வீண்உயிரிழப்புகளுக்கும் ஆபத் துக்களுக்கும் உள்ளாகின்றனர். இவர்களின் பாதுகாப்பான பய ணத்திற்குரிய ஒழுங்குகளைச் செய்து கொடுக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே மன்னார் மதவாச்சிப் பாதை மூடப்பட்டிருந்த வேளை யில் மன்னார் மக்கள் கொழும் பிற்குச் செல்வதென்றால் தாள்வுப் பாட்டிலிருந்து கற்பிட்டியூடாகப் படகுகளில் 7 மணித்தியாலங்கள் வரை பயணித்து கொழும்பை யடைய இரண்டு நாட்கள் வரை சென்றது. ஆனால் இராமேஸ்வரத் தில் இருந்து தலைமன்னார் வரு வதற்கு நான்கு மணித்தியாலங் களே போதும் என்றும், எனவே இது பெரிய சிக்கலுக்குரிய விடய மில்லையென்றும்; வீண் மரணங் களைத் தவிர்ப்பதற்கு இதற்கான போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் மன்னார் அர சாங்க அதிபர் விஸ்வலிங்கம் இங் குள்ள ஒன்பது படகுச் சேவை யாளர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (மி)

# பொன்னாவெளி கிராமத்தில் 22 பயனாளிகளுக்கு நிதி வழங்கல்

பொன்னாவெளிக் கிராமத்தில் கடந்த ஞாயிறு அன்று நியாப் திட் டம் மூலம் வழங்கப்பட்ட ஜீவ னோபாய ஆதாரச் செயற் பாட்டுத்திட்ட நிதியிலிருந்து 22 பயனாளிகளுக்கு முதற் கட்டமாக மேட்டுநிலச் செய்கை, உழவுமாடு, கடற்றொழில் போன்ற நோக்கங் களுக்காக தலா இருபது ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் க.வைரமுத்து, பொன்னாவெளி கிராம அலுவலர் க.தனபாலசிங் கம்(நேரு) சமூக உணர்வூட்டாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். ஒரு வாரத்திற்குள் ஏனைய பயனா ளிகளுக்கும் வழங்கப்படவுள்ளது எனவும் பொன்னாவெளி மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் தெரி விக்கிறது.

# கட்டாக்காலி நாய்களால் மக்களுக்கு பெரும் சிரமம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் மருதங் கேணி தொடக்கம் வெற்றிலைக் கேணி வரையான பகுதியில் பெரு மளவு கட்டாக்காலி நாய்கள் திரிவ தனால் வீதிகளால் பயணம் செய் வோர், மாணவர்கள் போன்றோர் பெரும் இடர்ப்பாடுகளை சந்தித்து வருகின்றனர். தற்போது வெப்ப காலம் என்பதால் சில நாய்களுக்கு நீர் வெறுப்பு நோயும் ஏற்பட்டுள் ளது. இது சம்பந்தமாக சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்று இப்பிர தேச மக்கள் வேண்டி நிற்கின்றனர். (11)

# தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவான கிளிநொச்சி வலய பாடசாலைகள்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு மாகாண பாட சாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சி, பெரு விளையாட்டு விழா, மெய்வல்லுனர் போட்டிகள் 2004-இல் வெற்றியீட்டி தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள்,வீரவீராங்கனை களின் விபரங்கள் பின் வருமாறு.

1.உடற்பயிற்சிப் போட்டி கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை (பெண்கள்), கிளி/ முழங்காவில் அ.வி. (ஆண்கள்).

2.பெருவிளையாட்டுப் போட்டி (சதுரங்கம்) கிளி/ வட்டக்கச்சி ம.வி. (பெண்கள்) 15 வயதுப் பிரிவு

3.மெய்வல்லுனர் போட்டி 11 வயதுப்பிரிவு உயரம் பாய்தல் ச.எழில்நிலா (கிளி/ புனித திரேசா மகளிர் கல்லூரி), 15 வயதுப் பிரிவு உயரம் பாய்தல் இ.சத்தியரத்தினம் (கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை), 15வயதுப் பிரிவு தட்டெறிதல் சி.லோஜிதன் (கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை), 17 வயதுப் பிரிவு 800மீ ஓட்டம் செ.ஜியந்த ரூபன் (கிளி/கிளிநொச்சி ம.வி), 17வயதுப் பிரிவு தட்டெறிதல் செ.செல்வரஜீவன் (கிளி தருமபுரம் ம.வி), 17வயதுப் பிரிவு உயரம் பாய்தல் க. கெசிக்குமார்( கிளி/ தருமபுரம் ம.வி), 19வயதுப் பிரிவு உயரம் பாய்தல் கு.கோபிநாத் (கிளி இந்துக் கல்லூரி), 19 வயதுப் பிரிவு தடை தாண்டல் கு. கோபிநாத் (கிளி/இந்துக்கல்லூரி), 15 வயதுப் பிரிவு குண்டு தள்ளுதல் ச.அனுசா (கிளி கனகபுரம் ம.வி.), 15 வயதுப் பிரிவு நீளம் பாய்தல் த.விஜயதாரணி (கிளி/ முழங்கா வில் ம.வி), 17 வயதுப் பிரிவு தட்டெறிதல் சீ.தாரணி (கிளி/ அக் கராயன் ம.வி), 17வயதுப் பிரிவு குண்டு தள்ளுதல் சீ. தாரணி (கிளி அக்கராயன் ம.வி), 17 வயதுப் பிரிவு ஈட்டி எறிதல் சீ.தாரணி (கிளி/ அக்கராயன் ம.வி) 17 வயதுப் பிரிவு குண்டு தள்ளுதல் வே.ரமா (கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா), 17வயதுப் பிரிவு உயரம் பாய்தல் ந. ஜான்சி (கிளி முழங்காவில் ம.வி), 17 வயதுப் பிரிவு 100மீ ஓட்டம் இ.துவாரகா (கிளி/ அக்கராயன் ம.வி), 17 வயதுப் பிரிவு 200மீ ஓட்டம் இ. துவாரகா கிளி/ அக்கராயன் ம.வி, 19 வயதுப் பிரிவு 1500மீ ஓட்டம் ம.சுபாஜினி (கிளி இந்துக் கல்லூரி), 19வயதுப் பிரிவு தட் டெறிதல் கு.துஷ்யந்தினி (கிளி பரந்தன் இந்து ம.வி.) மற்றும் மாகாண மட்டப் போட்டியின்றி தேசிய மட்டப் போட்டிக்கு அரை மரதன் ஓட்டப் போட்டி (ஆண்கள்) மூவரும், சைக்கிள் ஓட்டப் போட்டி (ஆண்கள்) மூவரும், சைக்கிள் ஓட்டப் போட்டி( பெண்கள்) மூவ ரும் தெரிவு செய்யப் பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

# படுகொலைகள் மூலம் இனத்தை அடிமைப்படுத்த முடியாதென்பதை தமிழர்கள் காட்டியுள்ளனர்

## -யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி. இளம்பரிதி



(யாழ்ப்பாணம்)

**ஒரு ஆக்கிரமிப்புப்படை மக்களைக் கொல்வதன் மூலமோ அல்லது சித்திரவதை செய்வதன் மூலமோ அச்சுறுத்தி அந்த இனத்தை அடிமைப்படுத்த முடியாதென்ற உண்மையை எம்மக்கள் உலகிற்குப் படிப்பித்திருந்தார்கள் என யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.**

1989ஆம் ஆண்டு 63அப்பாவிப் பொதுமக்கள் வல்வெட்டித் துறையில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட நினைவு நாளான நேற்று முன்தினம் அங்கு இடம்பெற்ற நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எங்களை இனியொரு வல்லாதிக்க சக்தி ஆக்கிரமிப்புச் செய்தால் என்ன நடக்கும் என்ற வரலாற்றுப் படிப்பினையினை எமது மக்களும், எமது தலைமையும் இந்த மண்ணில் நிரூபித்திருக்கிறது. எங்களுக்குச் செய்த கொடூரம் தான் இந்தியா இம் மண்ணில் தோற்றுப்போகக் காரணமானது. எமது மக்களின் சுதந்திர எழுச்சி தான் உலகின் 4ஆவது பெரும் படைப் பலத்தைக்கொண்ட இந்தியாவைத் தோற்கடிக்கச் செய்தது.

இந்தப்படுகொலைச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் தப்பித்த முதியவரான கோ.கருணானந்தராசா சம்பவத்தை நினைவு கூர்ந்து உரையாற்றும் போது,

அதன் காரணத்தினால்தான் பிராந்திய வல்லாதிக்கம் எம்மைக் கையாள முயன்று தோற்றுப் போனதாலேயே நாம் அதிலிருந்து இன்று முன்னேறி நாங்கள் எமது வெற்றிக்கான சர்வதேச அங்கீகாரத்தை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

எவ்வளவிற்கு எவ்வளவு எமது சொத்துக்களையும், கட்டடங்களையும் அழித்தால் என்ன? இன்றும் நாம் விடுதலையை வேண்டியே நிறகின்றோம். இதற்கான நல்லதோர் உதாரணமாக வல்வெட்டித்துறை இன்றும் உணர்த்தி நிற்கின்றது எனவும் தமது உரையில் அவர் தெரிவித்தார்.

எமது மக்களில் பலர் இன்றும் இந்தியா தான் எமக்கு நல்லதோர் தீர்வைப் பெற்றுத்தரும் என நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் இந்தியா எமது அயல் நாடு இரத்த உரித்துக்களைக் கொண்டதோர் நாடு என அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்திய அரசு இன்றும் தமிழ் மக்களிற்கு எதிராகவே செயற்படுகின்றது. அதற்காக இலங்கை அரசிற்கு ஆதரவு வழங்கியும் வருகின்றது எனக் குற்றஞ்சாட்டினார்.

நினைவுத்தூபி திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக அழைக்கப் பட்டிருந்த அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், இன்று அப்படுகொலை இடம்பெற்று 15வருடங்கள் கடந்து விட்டன. ஆனாலும் இந்தியப் படையினர் அன்று மேற்கொண்ட கொலைகளை நான் நேரில் கண்டவன். இன்றும் அவை கண்ணுக்கு முன் நிற்கின்றது. அடுத்து வரும் சந்ததிக்கு இந்திய அரசு செய்த இப்படுகொலை தொடர்பாக எதுவும் தெரியாது. அவர்களுக்கு இச்சம்பவங்கள் எடுத்துக் கூறப்பட வேண்டும்.

இப்படுகொலைகள் வருடாந்தம் நினைவு கூரப்படவேண்டும். அனைத்துத் தரப்பும் இந்திய அரசின் படுகொலையை அறிந்து கொள்ள வேண்டும். இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றார்.

## யாழ். பல்கலை பதிவாளர் தற்காலிக பணி நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் பதிவாளராக இருந்த தங்கராஜா நிதி மோசடி காரணமாக தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றார். இவ் விசாரணையின் பின்னரே இவர் தொடர்பாக நிர்வாகம் எந்த முடிவையும் எடுக்கும். எனவே அது வரைக்கும் பதிவாளர் பதவிக்காக அனுசா சிவனேசன்30-7 இல் இடம் பெற்ற யாழ் பல்கலைக்கழக பேரவைத் தீர்மானத்தின் படி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் நேற்று முன்தினம் நண்பகல் 1200 மணியளவில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (36)

## மட்டு.மாவட்டத்தில் பாதிப்புற்ற பட்டதாரிகள் பிரதேச செயலகங்கள் முன் மறியற்போர்

மண்முனை தென் எருவில் பற்றுப்பிரதேச செயலகத்திற்கு முன்னால் கூடிய பட்டதாரிகள் வாசலில் ரயர்களைப் போட்டு எரித்து அலுவலகத்தை திறக்க விடாமல் இருந்ததுடன் மூன்றாவது நாளாக பிரதேச செயலகத்தை தங்களது பூரண கட்டுப்பாட்டில் நேற்று வைத்தனர்.

இதனால் அலுவலகப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்தன. பிரதேச செயலாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய 388 பேருக்கும் நியமனம் வழங்க வேண்டும். ஆகிய இரு கோரிக்கைகளை முன் வைத்தனர். பின்னர் பட்டதாரிகள் பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை அவர்களிடம் சென்றும் முறையிட்டனர். பின்பு பிரதேச செயலாளர் எஸ். பாஸ்கரன் தான் விட்ட பிழைக்கு பட்டதாரிகளிடம் மன்னிப்புக் கோரியதாகவும் உதவித் திட்டமிடல் பணிப்பாளரை நம்பி தான் ஏமாந்ததாகவும் தெரிவித்தார். இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பாராளுமன்ற உறுப்பினர் அரியேத்திரன் அவர்கள் நிதியமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகத் தெரிவித்தார். இதற்கு மறுத்த பட்டதாரிகள் நியமனம் கிடைக்கும் வரை ஆர்ப்பாட்டம் தொடரப் போவதாகவும் குறிப்பிட்டனர்.

இதேவேளை ஆரையம்பதி பிரதேச செயலக பணிகள் நேற்று முன்தினம் காலை ஸ்தம்பிதமடைந்தன. பட்டதாரி ஆசிரியர் தெரிவில் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவில் ஒருவரும் தெரிவு செய்யப்படாததை ஆட்சேபித்து விண்ணப்பித்த பட்டதாரிகள் ஒன்று கூடி நேற்று முன்தினம் காலை ஆரையம்பதி பிரதேச செயலாளர் அலுவலகத்தின் முன் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதேச செயலாளர் உட்பட பணியாளர்கள் பணிக்கு செல்ல முடியவில்லை. அலுவல்களுக்காக வந்த பொது மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். மறியற் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பிரதேச செயலாளர் அரச அதிபருடன் இது சம்பந்தமாக பேசி நிவாரணம் பெற்றுத்தர முயற்சிப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

## மிருசுவில் அ.த.க. பாடசாலைக்கு கட்டடம் கட்ட ஜப்பான் உதவும்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கான புதிய கட்டடத்தொகுதிகளை அமைத்து வழங்குவதற்கு, ஜப்பானிய அரசு முன் வந்துள்ளது.

சுமார் 302 மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் வகுப்பறைகள், நூலகம், விஞ்ஞான ஆய்வு கூடம் மற்றும் ஆசிரியர் விடுதி என்பனவற்றுடன் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கான வசதிகள் என்பனவற்றை அமைத்து வழங்கவும் ஜப்பான் அரசு முன்வந்துள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளையடுத்து இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள போதும் இப்பாடசாலைக்கான அடிப்படை வசதிகள் ஏதும் இதுவரை ஏற்படுத்தி வழங்கப்படாதிருந்தது.

இதேவேளை இப்பாடசாலைக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் உரிய அதிகாரிகள் அக்கறையற்றிருப்பதாகப் பாடசாலைச் சமூகம் குற்றச்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## சிற்றூர்திச் சேவை சங்கத்தினர் யாழ். அரசியல் துறையினருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மற்றும் தெல்லிப்பளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சிற்றூர்தி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் யாழ். மாவட்ட அரசியல் துறையினர்க்குமிடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் தென்மராட்சிப் பிரதேச அரசியல் துறைச் செயலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவநாத், யாழ். மாவட்ட சிற்றூர்தி உரிமையாளர் சங்கத் தலைவர் கெங்காதரன் மற்றும் தென்மராட்சி, தெல்லிப்பளை ஆகிய பிரதேச சிற்றூர்திச் சங்க பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதில் தென்மராட்சி மற்றும் தெல்லிப்பளைப் பகுதிகளில இருந்து முகமாலைக்கு தனியார் சிற்றூதிச் சேவையை நடத்துவதில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டன. (33)

## யாழ்.இல் சொத்துரிமைப் பதிவுமுறையை அமுற்படுத்துமாறு அமைச்சர் உத்தரவு

யாழ். மாவட்டத்தில் காணிகளைப் பதிவுசெய்யும் முறைக்குப் பதிலாக சொத்துரிமைகளைப் பதிவுசெய்யும் முறையினை உடனடியாக நடைமுறைப்படுத்து மாறு அமைச்சர் அமரசிறி தொடங்கொட தமது அமைச்சின் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் காணி உரிமைகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்க்கும் முகமாகவே பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார். கடந்தகால யுத்த சூழ்நிலை காரணமாக யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்தவர்களில் 60 வீதமானோர் இடம்பெயர்ந்துள்ளதனாலேயே குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். இவ்வாறான நிலையில் இடம் பெயர்ந்தவர்களை மீளக் குடியேற்றல், பதிவுசெய்தல், மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆகியவற்றுக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளைப் பணித்துள்ளார். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, அனுராதபுரம், பொலநறுவை, புத்தளம் ஆகிய மாவட்டங்களின் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

## வன்னியிலிருந்து மணல் ஏற்றிச் சென்ற பாரஊர்திகள் கொடிகாமத்தில் தடுத்துவைப்பு

### -கிளி.பிரதேசசபை அனுமதிப்பத்திரத்தை ஏற்க பொலிசார் மறுப்பு

(தென்மராட்சி)

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் மணல் ஏற்றிவந்த 30இற்கும் மேற்பட்ட மணல் பாரஊர்திகள் கொடிகாமத்தில் வைத்து பொலிசாரால் பிடிக்கப்பட்டன 45இற்கும் மேற்பட்ட பாரஊர்திகள், முகமாலையில் வைத்தே பொலிசாரால் உள்ளே வரவிடாமல் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிய வருகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் அனுமதிப் பத்திரம் இன்றிவந்ததாலேயே தாம் திருப்பி அனுப்பியதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். கிளிநொச்சி பிரதேசசபை வழங்கியுள்ள அனுமதி செல்லாதது என்பதால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கொடிகாமம் பொலிஸ் அதிகாரி தர்செனா தெரிவித்தார் இப்படியான அறிவிப்புக்கள் தமக்கு வழங்கப்படவில்லை என்றும் இதுவரை காலமும் கிளிநொச்சி பிரதேச சபையின் அனுமதியுடனேயே தாம் மணல்களை கொண்டு வருவதாகவும் சாரதிகள் தெரிவித்தும், பொலிசார் அதற்கு உடன்படாமல் ஒன்பது மணல் பாரஊர்திகள் மீது வழக்குப் பதிவு செய்தும், ஏனைய இருபத்து இரண்டு பாரஊர்திகளை முகமாலைக்குப் பொலிசார் அனுப்பி உள்ளதாகத் தெரியவருகிறது. பொலிசாரின் இந்தத் திடீர் நடவடிக்கையால் நேற்று மாலை 5 மணியில் இருந்து 6.30 மணி வரை கொடிகாமம் எங்கும் பாரஊர்திகள் நிறைந்து பெரும் பரபரப்பாய்க் காணப்பட்டது. (28)

## தீவக மாதர் சங்கத்தினர் வேலணையில் சிரமதானம்

(தீவகம்)

யாழ். தீவகம் வேலணைப் பிரதேசத்தில் உள்ள உதய ஐக்கியமால் சனசமூக நிலையப்பகுதியில் நேற்று முன்தினம் சிரமதானப்பணிகள் இடம் பெற்றுள்ளன. தீவகப்பிரதேச மாதர் சங்கத்தினரால் தீவுப் பிரதேச சுகாதார நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இச்சிரமதானப்பணிகளில் தீவகப்பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரும் இணைந்து சிரமதானத்தை மேற்கொண்டனர். (33)

# ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்

என் அன்பு வாசகர்களே....!

'பெஞ்சமின்' என்ற மழலையைக் காட்டில் விட்டுவிட்டு உங்களையும் தவிக்க விட்டு விட்டேன்.

* * * * * * *

நானும் அந்த ஆசிரியையும் ஏனைய 29 மழலைகளும் துடித்துப் போய்விட்டோம், என்ன செய்வதென்றே தெரியவில்லை.காலம் கழிந்து கொண்டிருந்தது. ஏனைய மழலைகள் அழ ஆரம்பித்துவிட்டனர் என்னுடன் வந்த மற்ற ஆசிரியை கைகளைத் தலையில் வைத்தபடி ஏனைய மழலைகளை தேற்றிக் கொண்டிருந்தாள். அவள் தலை சுற்றி மயக்கமாய் விழுந்து விடுவாள் போலக் காணப்பட்டாள்.

என்னால் எதுவுமே செய்யத் தோன்றவில்லை. அங்கும் இங்கும் ஓடி ஓடிக்களைத்து விட்டிருந்தேன். கத்திக் கத்தி தொண்டை வேறு அடைக்க ஆரம்பித்தது.

"ஏனைய மழலைகளுக்கு இத்தாக்கம் பெரிதாவதைத் தடு அவர்களுக்குச் சாப்பாட்டைக் கொடு" என்று அந்த ஆசிரியைக்கு கட்டளையிட்டேன்.

என் கைத்தொலைபேசியை எடுத்து அவசரகாலப் 'பொலீசு' க்குத் தொடர்பு கொண்டேன். நிலமையை நன்றாகக் கேட்டார்கள். கூறினேன் ஏனைய பிள்ளைகளைக் கவனிக்கும்படியும் தாங்கள் 15 நிமிடத்தில் அங்கு வருவதாகவும் 'பொலிஸ் அதிகாரி' கூறினார்.

'பெஞ்சமின்... என் செல்லக் குழப்படிக்காரக் கண்ணா... இப்போதாவது வரமாட்டாயா? அல்லது ஒரு குரல் தரமாட்டாயா...?' மனதினுள் ஏங்கினேன்.

ஒவ்வொரு செக்கனிலும் என் நெஞ்சு பதறியது.

அந்தப் பதற்றம் - தேசங்கடந்து...

பல்லாயிரம் கிலோமீற்றர் கடந்து...

நிறம் கடந்து .... மதம்கடந்து... மொழி கடந்து...

மனிதத்தின் மேல் கொண்ட பதற்றம். ஆம் ஒரு மழலையில் கொண்ட பாசம் 'பாசம்' எல்லைகளற்றது. போலிகளற்றது.

* * * * * * *

சரியாகப் 16 ஆவது நிமிடத்தில் 4 பெரிய பொலிஸ் வாகனங்களில் சுமார் 20 பொலிஸ்காரர்கள் அந்தக் காடேஅதிரும்படியான அவர்களது பொலிஸ் சத்தமிடும் Alarm ஓசையுடன் வந்தார்கள், அவர்கள் வந்தவிதம் ஒரு யுத்தக் காட்சிபோல் இருந்தது பற்றாக் குறைக்கு 7 பெரிய 'அல்ஸேசன்' நாய்களையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அந்த நாய்கள் வேறு' வாள் வாள்' என்று பெரிதாகக் குரைத்துக் கொண்டிருந்தன.

வந்த இன்ஸ்பெக்டர்- அந்த ஆசிரியையையும் ஏனைய மழலைகளையும் உடனடியாகப் பள்ளிக்குத் திரும்புமாறு பணித்தார் அவர்களுடன் ஒரு பொலிஸ்காரரையும் அனுப்பிவைத்தார்.

என்னைத் தன்னுடன் இருக்குமாறு சொன்னார். நான் அவர் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். என் சோகத்தையும் பதற்றத்தையும் புரிந்து கொண்டவர்போல் அவர் சொன்னார்.

"Dont worry (கவலைப்படாதே)

We will findhim (நாங்கள் அவனைக் கண்டு பிடிப்போம்) " என்று, பின்னர் சகாக்களை நோக்கி

"Search (தேடுங்கள்)" எனக் கட்டளையிட்டார்.

நாய்களும் குரைத்த வண்ணம் தேடத் தொடங்கின. பொலிஸ்காரர்களும் அங்குமிங்கும் பற்றைக்குள் புகுந்து தேடத் தொடங்கினர்.

சரியாக 3 ஆவது நிமிடத்தில் என் 'ஜீன்ஸ்' பொக்கிற்றினுள் இருந்த என் கைத்தொலைபேசி அலறியது.

"உடனடியாக எல்லாப் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு பள்ளிக்கு வா" என்றார் எனது பள்ளியின் தலைவி. அதிர்ந்து போனேன். என்ன சொல்வது ? அவளுக்கு இந்த விஷயம் எப்படித் தெரியும்?

"பெஞ்சமின்......." என்று இழுத்தேன். "எல்லாம் தெரியும் நீ நான் சொன்னதைச் செய்" என்றாள் அதிகாரத்தோரணையில்.

"அப்ப...பெஞ்சமின்..?" என்று கேட்டேன்.

"அவன் இங்கே இருக்கிறான்.நீ உடனடியாக வா" Phone ஐ வைத்து விட்டாள்.

எனக்குத் தலையே வெடித்துவிடும் போலிருந்தது. ஒன்றுமே புரியவில்லை. 'பெஞ்சமின்' எப்படி அங்கு போனான்?

50 கி.மீ. தூரம்.

"அடேய் பெஞ்சமின் எப்படியடா போனாய்??? " மனதிற்குள் உறுக்கினேன்.

' எப்படிப் போயிருப்பான்....? ஒரு வேளை அவனை ஏற்கனவே அங்கு விட்டு விடுத்தான் வந்து விட்டேனோ? இல் லையே 'பஸ்'சிற்குள் எண்ணும் போதும் இறங்கும் போதும் 30 மழலைகள் இருந்த னவே 4 வயது மழலையால் எவ்வாறு அவ்வளவு தூரம் போயிருக்க முடியும்? இது எப்படி சாத்தியம் இந்த உலகத்தில் என்ன தான் நடக்கிறது.எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா...? அல்லது எல்லாமே ஒரு கனவா..?

எண்ணவோட்டத்தில் நினைத்துக் கொண்டிருந்தேன் அப்போது இன்ஸ்பெக்டர்

" What was the phone? (என்ன தொலை பேசியில்)" என்றதும் திடுக்கிட்டேன் செய்தியைச் சொன்னேன்.

அவர் சிரித்தபடியே....

'problems over (பிரச்சினைகள் முடிவுற்றன)" என்று சொல்லி விட்டு தன் சகாக்களை வெளியேறும் படி உத்தர விட்டார்.என்னையும் ஏற்றிக்கொண்டு அவர் வாகனத்தில் பள்ளியை நோக்கி விரைந்தார்.

பள்ளியில் இறக்கி விடப்பட்டேன் பள்ளியில் ஏனைய" மழலைகளும் அந்த ஆசிரியையும் ஏற்கனவே வந்து விட்டிருந்தனர். என்னை உடனடியாக 'staffroom (ஆசிரியர் அறை)க்கு வரும்படி செய்தி அனுப்பப்பட்டது. 'சரி, தொலைந்தேன் பிள்ளையை ஒழுங்காகப் பராமரிக்கத்தெரியாத குற்றத்திற்காக என் வேலை பறிபோகப் போகிறது. ஏதும் தண்டனையும் கிடைக்கலாம் என எண்ணியபடி staf froom ற்குள் நுழைந்தேன்

அங்கே- எல்லா ஆசிரியர்களும் தலைமை ஆசிரியரும் 'பெஞ்சமின்' ம், ஒரு சற்று வயது போன ஒரு பெண்மணியும் சுற்றவர இருந்தார்கள். என்னைக் கண்டதும் 'பெஞ்சமின்' ஓடோடி வந்து " Adhavan.... Adhavan" என்றபடி கட்டித் தழுவினான். எனக்கு ஏனோ.. கண்களில் நீர் ததும்பியது. தலைமை ஆசிரியை எனக்குரிய இருக்கையில் என்னை அமரச்சொன்னாள்.

"ஆதவன், முதலில் என்னை மன்னித்துக் கொள் 30 மழலைகள் போகும் ஒரு இடத்திற்கு நான் மேலும் இரு ஆசிரியர்களை அனுப்பாதது என் தவறு. அத்துடன் நீ பட்ட துயரத்தையும் மழலைகள் மேல் நீ கொண்ட பாசத்தையும் என்னால் உணர முடிந்திருக்கிறது இனி வரும் காலங் களில் இப்படி நடக்காது Iam so sorry" என்றாள் " பெஞ்சமின் எப்படி இங்கு வந் தான்" என்று கேட்டேன் இப்பொழுது அந்தப் புதிய பெண்மணி பேச ஆரம்பித்தாள்.

## பகுதி-07

" நீங்கள் சென்ற காடு எனது வீட்டுக் கருகில் தான் உள்ளது. நான் மதியச் சாப்பாடு முடிந்த பின்னர் அந்தக் காட்டில் சிறிய உலாப்போவது என் வழக்கம். வழமை போல நான் உலாப் போகையில் அந்த ஒற்றையடிப் பாதையில் ஒரு சிறிய உருவம் போய்க் கொண்டிருந்தது. அதை அண்மித்த போது.. ஒரு இசையுடன் ' நான் வீட்டுக்குப் போகி றேன்' நான் வீட்டுக்குப் போகிறேன் என்ற படி... கையை வீசி.. வீசி..பெஞ்சமின் நடந்து கொண்டிருந்தான் அவனை விசாரித்த பொழுது அவன் தான் பள்ளிக் கூடத்திற்கு வந்ததாகவும் பள்ளி முடிந்து தான் வீட்டுக்குப் போவதாகவும் கூறினான். வேறு எதுவும் அவனிடமிருந்து அறியமுடியவில்லை அதிர்ஷ்டவசமாக அவனது காற்சட்டைப் பையினுள் ஒரு காகித அட்டை இருந்தது.அதில் பள்ளியின் விலாசம் இருந்தது. உடனடியாக எனது 'கார்'ல்அவனை இங்கே கூட்டி வந்தேன்" என்றாள். நன்றி கலந்த பார்வையை அவளுக்கு வீசினேன் அவளும் பதிலுக்குப் புன்னகைத்தாள். அப்பாடா.. நெஞ்சும் மனசும்... இலகுவாயிருந்தது.

நான் இப்பொழுது 20 வருடங்கள் கழித்து என் தாய்நாட்டுக்கு வந்திருக்கிறேன். நான் வரும்போது விமானத்தில் யன்னலினூடாகப் பார்த்தேன். ஒரே வெளி... ஒரே நீல வெளி அப்போது எனக்கு ஒரு பாட்டு நினைவுக்கு வந்தது என்ன பாடல் தெரியுமா..? " நான் வீட்டுக்குப் போகிறேன் நான் வீட்டுக் குப் போகிறேன்" என்ற 'பெஞ்சமினின்' பாடல் தான் அது!

(மீண்டும் அடுத்த வாரம்..)

# புலிகளுடன் எட்டப்படும் இறுதித்தீர்வு மக்களிடம் முழுமையாகச் சமர்ப்பிக்கப்படும்

## -பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுக்களின் இறுதித் தீர்வு பொதுமக்களிடம் முழுமை யாக சமர்ப்பிக்கப்படும் என சிறி லங்கா பிரதிப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளின் பெறுபேறுகளை பொதுமக்களிடமிருந்து மறைப்பதற்கான எண்ணம் எதுவும் தமக்கு இல்லை எனத் தெரிவித்துள்ள அமைச்சர், இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படும் தீர்வு பொதுமக்களிடம் முன்வைக்கப் படும் எனவும்மேலும் கூறியுள்ளார். பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்பதவியினை ஏற்றுக் கொண்ட பின்னர் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள சிறிலங்காவின் விமானப் படைத்தளத்திற்கு மேற்கொண்ட முதலாவது விஜயத்தின் போதே முன்னாள் பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

இறுதித் தீர்வை அடிப்படையாகக் கொண்டே சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ள ரட்ணசிறி விக்ரம நாயக்க இவ்விடயத்தில் இரு தரப்பும் அர்ப்பணிப்புடன் செயற் படவேண்டுமெனவும் கோரியுள்ளார்.

# ஐக்கிய தேசியக் கட்சியின் அறிவிப்பால் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு சங்கடம்

(கொழும்பு)

இந்த அரசாங்கத்திற்கு உள் நோக்கங்களைக் கொண்டுள்ளோரின் ஆதரவு தேவையில்லை என ஜனதா விமுக்திபெரமுன கூறியுள்ளது.

ஜே.வி.பி.யினரின் இந்த அறிவிப் பானது ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த அறிக்கை ஒன்றிற்குப் பதிலளிக்குமுகமாக அமைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த அறிக்கையில், விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனையின் அடிப் படையில் அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமாயின் அதற்கு ஆதர வளிக்கப்படுமென தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பி. விடுத்த அறிக் கையில், சகல தேசபக்தி உடையவர்களும் இந்தக் கூற்றை மிகவும் அவதானத்துடன் எடுத்துக் கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனை தனி இராட்சியம் ஒன்றை அமைப்பதற்கு வழிவகுக்கக்கூடு மாகையால் ஜே.வி.பி.யும், சிறி லங்கா சுதந்திரக்கட்சியும் அதனை எதிர்ப்பதாகவும் அந்தஅறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெலிக்கந்த சோதனைச்சாவடியில் குண்டுவெடிப்பில் நால்வர் காயம்

வெலிக்கந்த செவனகல சோதனைச்சாவடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவுகுண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

சந்தேகத்திற்கிடமான முறையில் கொழும்பை நோக்கிப் பயணம் செய்த பாரவூர்தி ஒன்றை வழிமறித்த பொலிசார் அதனைச் சோதனையிட முற்பட்டபோது பார வூர்தியின் முன்புறமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது சோதனைச் சாவடியில் இருந்த பொலிசாரைச் சேர்ந்த ஒருவரும் ஊர்காவற் படையைச் சேர்ந்த இருவரும் பாரவூர்தியில் இருந்த ஒருவரும் காயம் அடைந்ததாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனையடுத்து பாரவூர்தியில் இருந்த இருவரும் கைது செய்யப் பட்டுள்ளனர். (32)

# சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் கல்வியூட்டல்

(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பான கல்வியூட்டல் நடவடிக்கை சிறிலங்காவின் ஆயுதப் படையினருக்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மனித உரிமைகளின் கல்வி நிலையம் நடாத்தும் இக் கல்வி யூட்டலின் முதல் செயலமர்வு மின்னேரியா இராணுவ முகாமில் ஓகஸ்ட் மாதமுதல்வாரத்தில் நடைபெறுகின்றது.

இராணுவ பிரிகேடியர்கள், கப்டன்கள் உட்பட ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆயுதப்படையினர் இதில் பங்கு பற்றுகின்றனர்.

சர்வதேச, தேசிய மனித உரிமைகள்,அடிப்படை உரிமைகள் ஆட்சிச்சட்டம், சனநாயக நாட்டில் இராணுவத்தின் பங்கு உட்பட பல விடயங்களை இக் கல்வியூட்டல் உள்ளடக்கியுள்ளது.

# குழு அமைக்கமுடிவு

(கொழும்பு)

கொத்மலையில் மின் உற்பத்தி நிலையம் அமைப்பது பற்றி ஆராயகுழு ஒன்று அமைப்பதென சனாதிபதி முடிவெடுத்துள்ளார்.

இந்த மின் உற்பத்தி நிலையம் குறித்து அமைச்சர்களான பௌசியும் மைத்திரிபால சிறிசேனவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதைய டுத்தே சனாதிபதி குழு ஒன்றை அமைக்க முடிவெடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**26:** அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல் கேசன் தலைமையிலான குழுவினர் சந்தித்து சமகால அரசியல் நிலவரம் குறித்து கலந்துரையாடினர்.


சமகால ஆராய்வு

**27:** கிளிநொச்சி காவல் பணிமனையில் பாதுகாக்கப்பட்டு வரும் மனித எலும்புக் கூடுகளைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.


எலும்புக்கூடுகள் பார்வை

*. டெக் நிறுவனத்தினதும் யுனிசெப் நிறுவனத்தினதும் நிதியுதவியோடு தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் புதிதாக அமைக்கப்பட்ட உப்பு உற்பத்திப் பேட்டை திறந்து வைக்கப்பட்டது.


உப்பு உற்பத்திப் பேட்டை திறப்பு

*.சிறிலங்காவின் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் சந்தித்து தற்கால அரசியல் நிலவரம் குறித்து கலந்துரையாடினர்.


ரணிலுடன் சந்திப்பு




## 26.07.2004-01.08.2004

**28:** அம்பாறை மாவட்ட மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மரியாதைக் கொடுப்பனவு வழங்கும் வைபவம் தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை பணிமனையில் நடைபெற்றது.

*. தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி களுக்கும் முஸ்லிம் பிரநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு அம்பாறை அரசியல்துறை பணிமனையில் இடம் பெற்றது.

*. தமிழீழ நிர்வாகத்துறையின் 7ஆவது நீதிமன்றம் அடம்பனில் திறந்து வைக் கப்பட்டது.



நீதிமன்றம் திறப்பு நிகழ்வில்

**29.** 1996/97ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைதாகி காணாமற் போனோர் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணையில் கோப்ரல் ராஜபக்ஷவை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

*.நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து சமாதான நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

**30.** தமிழீழ வரலாற்றுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு கிளி.மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.


மாணவர்களுக்குப்பாராட்டு

*. சிங்கப்பூருக்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய அநுராபண்டார நாயக்க விசேட ஊடகவியலாளர் மாநாட்டை நடாத்தினார்.


விசேட மாநாட்டில் அநுரா

**31:** சிறிலங்கா புலனாய்வுத்துறையின ருடன் இணைந்து செயற்பட்டவரும் கிழக்கில் நடந்த பல இனப்படுகொலை களுக்கு சிறிலங்கா ஆயுதப்படைகளிற்கு உதவியாகச் செயற்பட்டவருமான புளொட் மோகன் பம்பலப்பிட்டியில் சுட்டுக்கொலை.


கொலையாளி சுட்டுக்கொலை

**1:** சிறிலங்கா இராணுவப் புலனாய்வாளர்கள் இருவரும் அவர்களுக்குத் துணையாக செயற்பட்டு வந்த மற்றொருவரும் ஆயுதங்களுடன் கரடியனாறு வேப்பவெட்டுவான் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளால் கைது.

*. கொழும்பில் நடைபெற்ற ஆசியக் கோப்பைக்கான கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் இந்திய அணியை 25 ஓட்டங்களால் தோற் கடித்து ஆசியக் கோப்பையை சிறிலங்கா அணிவென்றது.



வெற்றியின் பூரிப்பில்

# புதுக்குடியிருப்பு நகரின் அபிவிருத்திக்கென வர்த்தக நிலையங்களை பின்நகர்த்த ஏற்பாடு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நகரை அபி விருத்தி செய்வதில் புதுக்குடி யிருப்புப் பிரதேச செயலர் செ.தயா னந்தா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இந்த வகையில் கடந்தவாரம் புதுக்குடியிருப்பு நகரப்பகுதிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர், முல்லைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், முல்லை மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர், முல்லை மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர், கிராம சேவையா ளர்கள், காவல்துறையினர் ஆகி யோர் அடங்கிய குழுவினர் சென்று வர்த்தக நிலையங்களைப் பின்நோக்கி நகர்த்துவது பற்றி வர்த்தகர்களுக்கு அறிவுறுத் தல்களை வழங்கிச்சென்றுள்ளனர்.

இதற்கான கால அவகாசத் தையும் அவர்கள் அறிவித்து முள்ளனர். (08)

# பயனாளிகள் தெரிவு

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன், போரூட் நிறு வன நிதியுதவியுடன் அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்திற்குட்பட்ட உருத்திரபுரம் வடக்கு, குஞ்சுப்பரந்த ன், நீவில், சக்திபுரம், உருத்திரபுரீஸ் வரம் கிராமங்களின் 2004ஆம் ஆண்டிற்கான போரூட் திட்டப் பயனாளிகள் தெரிவு அகதிகள் புனர் வாழ்வு நிறுவன மண்டபத்தில் அண்மையில் உருத்திரபுரம் வடக்கு கிராம சேவையாளர் வை.வைத்தீஸ் வரமூர்த்தி தலைமையில் இடம் பெற்றது.

இதில் தமிழர் புனர்வாழ் வுக்கழக அக்கராயன் பிரதேச உத விப் பணிப்பாளர் சி.கோ நல்லையா, கிளி.மாவட்ட தமிழர் புனர்வாழ் வுக்கழக நிக்கொட் நிறுவனப் பிரதிநிதிகள், போரூட் பிரதிநிதிகள், நிறுவன இணைப்பாளர், பணியாளர் கள்,சமூகபொருளாதார அபிவிருத்தி குழு பிரதிநிதிகள் உருத்திரபுரீஸ் வரம், மாதர் சங்கப்பிரதிநிதிகள், சக்திபுரம், உருத்திரபுரீஸ்வரம் கிரா மிய அபிவிருத்தி சங்கம் உருத்திர புரீஸ்வரம், சக்திபுரம் குஞ்சுப் பரந்தன், நீவில் பகுதிமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு திட்டப்பயனாளிகளை தெரிவு செய்தனர். இதில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு நெற் செய்கை பயனாளிகள் 50 பேரும், பால் மாடு வளர்ப்புக்காக 15 பேரும், ஆடு வளர்ப்புக்காக 04 பேரும் பயனாளிகளாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

## எழுச்சிப் பேரவை நிர்வாகத் தெரிவு

மாங்குளம் கரிப்பட்ட முறிப்பு 9ஆம் கட்டை கிராமத்திற்கான புதிய தேசிய எழுச்சிப் பேரவை தெரி விற்கான ஒன்று கூடல் இப்பகுதி ஆலய முன்றலில் அண்மையில் கிராமப் பொறுப்பாளர் தலைமை யில் இடம் பெற்றுள்ளது.

இதில் ஒன்பது பேர் அடங்கிய நிர்வாகக் குழு தெரிவானதுடன் தே.எ.பேரவை தொடர்பான கருத்துக் களை ஒலுமடு கிராமப் பொறுப்பா ளர் பரிதி, முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுபபாளர் மயூரன் ஆகியோர் வழங்கினர்.(19)

### -வெலிக்கண்டல் பாலத்தில் பயணித்த

# ஒன்பது வாகனங்களின் ஓயில் தாங்கிகள் சேதம்

(நமது நிருபர்)

பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள வெலிக் கண்டல் பாலம் பழுதடைந்து காணப் படுவதால் இதுவரை ஒன்பது வாக னங்களின் ஓயில் தாங்கிகள் சேத மடைந்துள்ளன.

மேற்படி பாலத்தை திருத்தி அமைக்கும் பணி ஆரம்பித்துள்ள போதிலும் தற்போதுள்ள பழைய பாலம் முற்றாகப் பழுதடைந்துள்ள மையால் இதனூடாகப் பயணிக்கும் வாகனங்கள் பாலத்தைத் தாண்டும போது இடையில் காணப்படும் பெரிய இரும்புத்தகட்டில் வாகனத் தின் இயந்திர அடிப்பகுதி தாக்கப் படுவதால் ஓயில்தாங்கி உடைந்து பெரியளவில் பணச்செலவை ஏற் படுத்துவதுடன் அந்த இடத்திலி ருந்து வாகனத்தை வேறொரு வாகனத்தில் கட்டி இழுத்துச்செல்ல வேண்டிய அவலநிலைக்கும் உள் ளாகின்றது. இதனால் வாகனங்க ளில் செல்வோர் பெரும் பணவிர யத்துடன் பல அசௌகாரியங்க ளுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

# கிளிநொச்சியில் கட்டாக்காலி மாடுகளால் சிறுபோக நெற்செய்கை பெரும் பாதிப்பு

### உடன் நடவடிக்கை எடுக்கக் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி உருத்திரபுரம், குஞ்சுப்பரந்தன் பகுதிகளிலுள்ள நெல்வயல்களை கட்டாக்காலி மாடுகள் அழித்துவருவதன் காரணமாக அப்பகுதி விவசாயி கள்பெரும் கவலையடைந்துள் ளனர்.

தினமும் பகல் இரவு என்றில் லாது கூட்டம் கூட்டமாக கட்டாக் காலி மாடுகள் அப்பகுதி வயல்க ளில் மேய்ந்து நெற்பயிர்களை உழக்கி துவம்சம் செய்து வருவ தாகவும். இதன் காரணமாக பலரது நெல்வயல்கள் கைவிட வேண்டிய ஏதுநிலை தோன்றி யுள்ள தெனவும் அப்பகுதி விவசா யிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் துறைசார்ந்தவர்கள் உடன் நடவடிக்கையினை மேற் கொண்டு கட்டாக்காலி மாடுகளின் தொல்லையிலிருந்து நெற்பயிர் களை காப்பாற்ற முன்வரவேண்டு மென அப்பகுதி விவசாயிகள் வேண்டி நிற்கின்றனர். (சோ.கு)

# நிதியுதவி வழங்கப்பட்டும் வீதிப்புனரமைப்பு இல்லை!

மன்னார் ஓலைத்தொடுவாய் கிராமத்தையும், பேசாலையையும் இணைக்கும் வீதி மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளமையினால் இவ்வீதி திருத்தம் செய்வதற்கென உரியநிதி வழங்கப்பட்டும் கூட இவ்வீதி திருத்தியமைக்கப்படாமையினால் ஓலைத் தொடுவாய் கிராமத்தில் மீள் குடியமர்ந்துள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.இக்கிராமத்திலிருந்து மாணவர் கள் பேசாலை மத்திய மகாவித்தியாலயத்திற்குக் கல்விகற்பதற்குச் சென்று வருகின்றனர். இவ்வீதியின் மோசமான நிலைகாரணமாகப் பொதுமக்கள் போக்குவரத்தில் மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

வடக்கு - கிழக்கு மாகாணசபை

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் [கார்ப்]

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல.2043 – SRI(SF)

# யாழ். மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் இல.02

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்ட (CAARP) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விகோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ருபா) |
|---|---|---|---|---|
| 01. | JE/CAARP/ED/01 | யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் 90'X25'அளவுடைய இரண்டு மாடி விஞ்ஞான ஆய்வு கூடம் மீளமைத்தல் | M6 | 52,000/= |
| 02. | JE/CAARP/ED/05 | இடைக்காடு மகாவித்தியாலயத்தில் 70'X25'அளவுடைய இரு மாடி வகுப்பறை கட்டடம் மீளமைத்தலுடன் ஆசிரியர் விடுதி புனரமைத்தல் | M7 | 41,000/= |
| 03. | JE/CAARP/ED/07 | கரவெட்டி விக்னேஸ்வராகல்லூரியில் 110'X25'அளவுடைய இரு மாடிவகுப்பறைக்கட்டடம்மீளமைத்தல்(தொகுதி1) | M7 | 43,000/= |
| 04. | JE/CAARP/ED/07 | கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் 60'X25'அளவுடைய நூலகக்கட்டடம் பூரணப்படுத்தல் (தொகுதி2) | M9 | 10,000/= |
| 05. | JE/CAARP/ED/08 | பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தில் அதிபர் அலுவலகம், நூலகம் உள்ளடங்கலாக 90'X25'அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M7 | 35,000/= |
| 06. | JE/CAARP/ED/09 | தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் 110'X25'அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் (தொகுதி1) | M7 | 43,000/= |
| 07. | JE/CAARP/ED/09 | தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தில் 100'X50'அளவுடைய பிரார்த்தனை மண்டபம் திருத்துதல் (தொகுதி 2) | M8 | 12,000/= |
| 08. | JE/CAARP/ED/10 | மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தில் அதிபர் அலுவலகம், நூலகம் உள்ளடங்கலாக 110'X25'அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 | 51,000/= |
| 09. | JE/CAARP/ED/12 | மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலையில் 110'X25'அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல். | M7 | 43,000/= |
| 10. | JE/CAARP/ED/13 | மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் 90'X25'அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M7 | 35,000/= |
| 11. | JE/CAARP/RD/01 | வலிகாமம் கிழக்குப்பிரதேச சபையின் 6.86கி.மீஅளவுடைய கிராமிய வீதி புனரமைத்தல் | M7 (பெருந்தெருக்கள்) | 47,000/= |
| 12. | JE/CAARP/RD/02 | வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் 5.48கி.மீ. அளவுடைய கிராமிய வீதி புனரமைத்தல் | M7 (பெருந்தெருக்கள்) | 45,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கைத் தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின்(இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்ராட்"டுடன் M7இற்கு மேல் பதிவு செய்யதவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களை திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன்,கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

IV "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரர்களுக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றிற்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித்திட்டப்பணிப்பாளர் அலுவலகம், NECORD,கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி -021 2223625 தொலைநகல்: 021-2225163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk).

06. ஒப்பந்த ஆவணங்கள் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

07. இரு பொறி வைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

08. அந்தந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப்பிணை முறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் " தலைவர்,மாவட்ட கேள்விச்சபை, NECORD கச்சேரி, யாழ்ப்பாணம்"இற்கு ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி பி.ப.1.30இற்கு முன்பாக கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும் கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. ஒப்பந்தகாரருக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

செ.பத்மநாதன்,
தலைவர், மாவட்ட கேள்விச் சபை,
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர், யாழ்ப்பாண மாவட்டம்.

(சி-10124)


## நான்கு வீடுகளில் களவு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நான்கு வீடுகளில் களவுபோயுள்ளது. வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவரின் வீட்டிலும், ஏனைய மூன்று வீடுகளிலும் களவுபோயுள்ளது.

வெளிநாட்டிலிருந்து வந்தவரின் வீட்டில் ஒருதொகை பணமும், நகையும், மற்றும் ஒரு வீட்டில் குழந்தையின் கையிலிருந்த காப்பும், மோதிரமும், இன்னும் ஒருவீட்டில் களவுபோன விபரம் தெரியவில்லை. மற்றைய வீட்டில் வானொலிப்பெட்டியும் களவு போயுள்ளன. இதில் மூன்று களவுகள் உடுத்துறையிலும், ஒருகளவு வேம்படியிலும் இடம்பெற்றுள்ளன. களவு சம்பந்தமாக மருதங்கேணி காவல் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (11)

## புனரமைப்பு

வட்டக்கச்சி 10 வீட்டுத்திட்ட கறுப்பிக்குள வாய்க்கால், பாலம், புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றது.

பத்துவீட்டுத் திட்டத்திற்கு அண்மையாக உள்ள கறுப்பிக்குளம் வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் நியாப்திட்டத்தினரால் நடைபெற்றுவருகின்றது. அத்தோடு கறுப்பிக்குளக் கட்டின் கீழ்ப் பாதைப் பாலம்புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருவதால் போக்குவரத்துத் தற்காலிகமாகதடை செய்யப்பட்டுள்ளது. அடுத்ததாக 70 ஏக்கர் பகுதிக்குள் நீர்த்துரிசுகள் புதிதாகக்கட்டப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (12)

## விசாரணை

(கொழும்பு)

நான்கு உயர் இராணுவ அதிகாரிகள் பொலிஸ் திணைக்கள எட்டு உயர்அதிகாரிகள், ஏனைய இரண்டு இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக லஞ்சஊழல் குற்றச்சாட்டுக் குறித்த விசாரணை ஆரம்பமாகியுள்ளது. அரசாங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இருவர், ஏழு சிரேஷ்ட பொறியியலாளர்கள் மற்றும் எட்டு பாடசாலை அதிபர்களுக்கும் எதிராக லஞ்சஊழல் திணைக்களம் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

## மீண்டும் சந்தர்ப்பம்

(கொழும்பு)

அரசுக்கு ஆதரவளிக்க ஜாதிக ஹெலஉறுமய தயாராக உள்ளது. ஆனால் அரசாங்கம் எமது ஆதரவை ஏற்பதற்கு தயாராக இல்லை என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உடுவேதம்மாலோக தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எம்முடன் கலந்தாலோசிப்பதற்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டு உள்ளதென தம்மா லோகதேரர் கூறியுள்ளார்.

## உலக வங்கி நிதியுதவி

எயிட்ஸ் நோய்க்கான மருந்துக்கென உலக வங்கி இலங்கைக்கு பன்னிரண்டு மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளது.

இதன் மூலம் இலங்கையில் பெற முடியாததும், அதிக விலையுடையதுமான எயிட்ஸ் தடுப்பு மருந்தை அரசாங்க வைத்தியசாலைகளில் இனி வரும் காலங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத்திணைக்களத்தின் எயிட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் அரசாங்க சிகிச்சை நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 552 எயிட்ஸ் நோயாளர்களில் 100 பேர்வரைமேற்படி நிதியுதவியில் பயனடைவார்கள் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள கீழ் வரும் பாடசாலைகளின் ஆரம்ப வகுப்பறைக் கட்டடங்களின் திருத்த வேலை மேற்கொள்வதற்கான கேள்விகள் ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. இக்ராட் தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தகாரர்களும் மற்றும் அந்தந்தப் பாட சாலை அபிவிருத்திச் சங்கங்களும் இவ்வேலையை மேற்கொள்ளத் தகுதி யானவர்கள். கேள்விகோருவோர் கீழ்வரும் அட்டவணையில் உள்ளவாறு மீளளிக்கப்படும் மற்றும் மீளளிக்கப்படாத தொகைகளைச் செலுத்திக் கேள்விப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 16.08.2004 மு.ப 10.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 17.08.2004 பி.ப 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே நேரத்தில் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ விரும்பின் சமுக மளிக்கலாம். கேள்விப்பத்திரங்களை தலைவர், கேள்விச்சபை, வலயக்கல்விப்பணிமனை, கிளிநொச்சி என்ற விலாசத் திற்கு நேரடியாகவோ பதிவுத்தபாலிலோ அனுப்பிவைக்கலாம்.

| இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை | மீளளிக்கப்படாத தொகை |
|---|---|---|---|
| 01 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் - கிளி.இயக்கச்சி அ.த.க.பாடசாலை. | 2500.00 | 500.00 |
| 02 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் - கிளி.சோரன்பற்று கணேசா வித்தியாலயம் | 2500.00 | 500.00 |
| 03 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் - கிளி.புனித அந்தோனியார் நோ.க | 2500.00 | 500.00 |
| 04 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் - கிளி. மத்தியகல்லூரி | 2500.00 | 500.00 |
| 05 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் - கிளி.பாரதி வித்தியாலயம் | 2500.00 | 500.00 |
| 06 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் - கிளி. நாச்சிக்குடா அ.த.க.பாடசாலை. | 2500.00 | 500.00 |
| 07 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் - கிளி. குமுழமுனை அ.த.க.பாடசாலை. | 2500.00 | 500.00 |
| 08 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் - கிளி.கல்மடுநகர் அ.த.க.பாடசாலை. | 2500.00 | 500.00 |
| 09 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் - கிளி. இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை. | 2500.00 | 500.00 |

ப. அரியரத்தினம்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி-10052)

வாடகைக் கார் உரிமையாளர் கழகம் வன்னி

## பொதுச்சபைக் கூட்டம்

வாடகைக் கார் உரிமையாளர் கழகத்தின் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 07.08.2004 ஆம் நாள் சனி காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். உறுப்புரிமை பெற்றுள்ள உரிமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

"நன்றி"

**நிகழ்ச்சி நிரல்**

* அகவணக்கம்.
* தலைவர் உரை.
* செயலாளர் சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
* கணக்காளர் கணக்கறிக்கை வாசித்தல்.
* சென்ற நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு சேவை நலன் பாராட்டு நிகழ்வு
* ஊர்திகளின் பணி தொடர்பாக ஆராய்தல்.
* ஏனைய விடயங்கள்.
* நன்றி உரை.

தேவதாஸன் ரூபன் (இராகுலன்)
தலைவர்.

தகவல்:-
கந்தையா நிர்மலன்
செயலாளர்.

(4674)

## 24 .ஸ்ரீ5123 இலக்க பாரவூர்திபகிரங்க ஏலவிற்பனை

**10.08.2004**

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்த மான 24ஸ்ரீ 5123 இல (911 பென்ஸ்) பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. பாரவூர்தியை 04.08.2004 தொடக்கம் 10.08.2004 வரை கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பரந்தன் பாரவூர்தி தரிப்பிடத்தில் அலுவலக நேரத்தில் பார்வை இடலாம். 10.08.2004 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

01 மீளளிக்கும் பணமாக ரூபா 1000/ செலுத்தியே கேள்வியில் பங்குபற்றலாம்.

02 தெரிவு செய்யப்படுபவர் மூன்று நாட்களுக்குள் முழுப் பணத்தினையும் செலுத்தி பாரவூர்தியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்,
மருதங்கேணி,
தாளையடி.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
பொ. ஸ்ரீராமச்சந்திரன்,
பொதுமுகாமையாளர்.

(சி.9764)

## 08 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
24
-
05
-
1970



தாயகவிடிவில்
04
-
08
-
1996

### லெப்.அண்ணாத்துரை
### (கோவிந்தபிள்ளை பத்மநாதன்)

விடுதலை உணர்வோடு வீறுகொண்டெழுந்த
எங்கள் செல்வமே. பத்மநாதா,
மண்ணிலே நீ விதையாகி எட்டு வருடங்கள் ஆனதையா!
எட்டு வருடங்களானாலும் எங்கள் மனதைவிட்டு
உன் நினைவு எட்டிச் செல்லவில்லை.
"அண்ணாத்துரை" என்று அன்போடு அழைக்கப்பெற்றவனே.
"சத்ஜெய" நடவடிக்கைச் சமரில்
நீ சரியவில்லை; சரித்திரமாகிவிட்டாய்

(4868)

நூலகம்
யாழ்ப்பாணம்





## வெற்றிபெற்றால் பாராட்டும் ரசிகர்கள் தோற்றுவிட்டால் விமர்சிப்பது முறையல்ல

### கங்குலி

ஆசியக் கோப்பைக் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்ததற்காக இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் விமர்சித்ததற்கு அணித்தலைவர் கங்குலி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இறுதிப் போட்டியில் உலகின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட இந்திய அணி 229 ஓட்டங்களைக்கூட எடுக்க முடியாது சிறிலங்காவிடம் படுதோல்வி அடைந்தது.

இந்திய அணியின் இந்த மோசமான ஆட்டம் கிரிக்கெட் ரசிகர்களிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

இதனை அடுத்து வீரர்களின் மோசமான ஆட்டத்துக்கு இந்திய கிரிக்கெட் வாரியத் தலைவர் டால்மியா கண்டனம் தெரிவித்தார்.

இந்நிலையில், வெற்றிபெற்றால் பாராட்டும் ரசிகர்கள் ஒரு போட்டியில் தோற்றுவிட்டால் வீரர்களை விமர்சிப்பது முறையல்ல எனக் கோபத்துடன் கூறினார் கங்குலி.

## ஐ.சி.சி. போட்டிகள் தொடர்பான விசாரணைக் குழுவில் வெத்தமுனி

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இங்கிலாந்தில் நடைபெறும் ஐ.சி.சி. மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் தொடர்பான விசாரணைக்குழுவில் (JAVY) சிறிலங்காவின் முன்னாள் வீரர் சித்தவெத்த முனியும் அங்கம் வகிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குழு டெஸ்ட், ஒரு நாள் போட்டிகளின் சிறப்பாட்டக்காரர்கள், வளர்ந்துவரும் வீரர், சிறந்த ஒரு நாள் தொடர் அணி, டெஸ்ட் அணி, மிகச் சிறந்த அணி என்பவற்றை தெரிவு செய்யும்.

## நெதர்லாந்து கிரிக்கெட் தொடரில் கில்கிறிஸ்ட் இல்லை! பிரெட் லீக்கு இடம்

எதிர்வரும் 19ஆம் திகதி நெதர்லாந்தில் தொடங்கும் விடியோகான் கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் 14 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணியில் கில்கிறிஸ்ட் இடம்பெறவில்லை. அவரது மனைவி நிறைமாத கற்பிணியாக உள்ளதால் அவருடன் இருக்கவேண்டிய கட்டாயத்தில் கில்கிறிஸ்ட் உள்ளார். இதனால் நெதர்லாந்து போட்டியில் அவர் பங்கேற்க வில்லை என்றாலும் சம்பியன்ஸ் கோப்பை போட்டியில் அவர் பங்கேற்பார். இதையடுத்து டேரன் லீமன் அணியின் துணைத் தலைவராக பொறுப்பு வகிப்பார் என அஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் தெரிவித்துள்ளது. அத்துடன் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னும் அணியில் இடம்பெறவில்லை. ஊக்கமருந்து காரணமாக அவருக்கு ஓர் ஆண்டு தடை விதிக்கப்பட்டபோது ஒரு தினப் போட்டிகளில் விளையாடுவது குறித்து முடிவுசெய்ய வேண்டியுள்ளது என அவர் அறிவித்த காரணத்தினால் வோர்னை பரிசீலிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் இலங்கையுடனான தொடரின்போது கணுக்காலில் காயமுற்று பாதியிலேயே விளையாட முடியாமல்போன பிரட் லீ, உடல் தகுதி பெற்றுள்ளதால் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சிறிலங்காவுக்கு இரண்டாம் இடம்

ஆசியக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் சிறிலங்கா கிரிக்கெட் அணி ஒரு நாள் தரவரிசையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

மேற்படி தரவரிசையை ஐ.சி.சி. நேற்று வெளியிட்டுள்ளது.

இதன்படி தொடர்ந்தும் உலக சம்பியன் அவுஸ்திரேலியா முன்னணி வகிப்பதுடன் தென்னாபிரிக்க அணி பின்னுக்குத் தள்ளப்பட்டு மூன்றாம் இடத்தையும், நியூசிலாந்து நான்காவது இடத்தையும், இந்தியா ஐந்தாவது இடத்தையும், இங்கிலாந்து ஆறாவது இடத்தையும், பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவு, சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகள் முறையே 7,8,9,10ஆம் இடங்களைப் பெற்றுள்ளன.

## தலைவர் பதவியில் இருந்து எதற்கு விலகவேண்டும்? முடிந்தளவு அணியை வழிநடத்தி செல்வேன் - லாறா



தலைவர் பதவியிலிருந்து எதற்கு நான் விலகவேண்டும் என கேள்வி எழுப்பியுள்ளார் மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் பிரையன் லாரா. இங்கிலாந்திடம் இரண்டாவது டெஸ்டிலும் அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் தோல்வியுற்றதும் நிருபர்களின் கேள்விக்கு மேற்கண்ட பதிலை அளித்துள்ளார் லாரா. எட்ஜ்பாஸ்டனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 256 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகளைத் தோற்கடித்தது இங்கிலாந்து. 4ஆம் நாளான

ஞாயிற்றுக்கிழமையே ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதையடுத்து 4 போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என முன்னிலை பெற்று தொடரைக் கைப்பற்றும் வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொண்டது இங்கிலாந்து. லோர்ட்ஸில் நடைபெற்ற முதல் டெஸ்டிலும் அதிகமான ஓட்ட வித்தியாசத்தில் (210 ஓட்டங்கள்) மேற்கிந்திய தீவுகள் தோல்வியுற்றது. 2வது டெஸ்ட் தோல்விக்குப்பிறகு நிருபர்களிடம் லாரா கூறியதாவது தலைவர் பதவியிலிருந்து விலகுவது குறித்து இத் தருணத்தில் நினைத்துக்கூட பார்க்கவில்லை. குறைந்தது இத்தொடர் முழுவதுமாவது அணியை வழிநடத்திச் செல்வேன். தலைவர் பதவி குறித்து கிரிக்கெட் நிர்வாகம்தான் முடிவு செய்ய வேண்டும். மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் வளர்ச்சிக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளேன்.நிர்வாகம் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே மீண்டும் தலைவர் பதவியைப் பெற்றேன். முடிந்த அளவு சிறப்பாகவும் வழி நடத்தி வருகிறேன் என்றார் லாரா. ஆஸ்லே கைல்ஸின் அபாரமான வீச்சால் (5விக்கெட்) 222 ஓட்டங்களுக்கு இரண்டாவது இன்னிங்சை இழந்தது மேற்கிந்தியதீவுகள் அணி.

## ஆசியக் கிண்ண கால்பந்து போட்டி இறுதிப் போட்டிக்கு ஜப்பான் அணி

சீனாவில் நடைபெற்றுவரும் ஆசியக் கிண்ண கால்பந்து போட்டியில் ஜப்பான் அணி இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

நேற்று நடைபெற்ற விறுவிறுப்பான ஒரு அரையிறுதியாட்டத்தில் ஜப்பான் அணி பலமான பஹ்ரேன் அணியை 4-3 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

போட்டியை நடாத்தும் சீனாவுக்கும், பலமான ஈரான் அணிக்கும் இடை யிலான மற்றுமொரு அரையிறுதியில் வெற்றிபெறும் அணியை, இறுதிப்போட்டி யில் ஜப்பான் எதிர்கொள்ளும்.



மொன்ரியலில் நடைபெற்ற றோஜர் கிண்ண டெனிஸ் போட்டியின் முதலாம் சுற்றில் ஜெர்மனியின் மர்லினை வென்று விட்ட மகிழ்ச்சியைப் பகிரும் பிரான்சின் மேரி பியஸ்

## பெடரர் பட்டம் வென்றார்



கனடாவில் நடைபெற்ற எ.டி.பி.மாஸ்டர் டென்னிஸ் போட்டியில் சுவிற்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் பட்டம் வென்றார்.

விறுவிறுப்பான வகையில் ஒன்றரை மணிநேரம் நடந்த இப்போட்டியில் பெடரர் தனது திறமையை வெளிப்படுத்தி 7-5, 6-3 என்ற நேர் செட்களில் தன்னை எதிர்த்தாடிய போட்டியின் நடப்புச் சம்பியனும் அமெரிக்காவின் வீரருமான அன்டி ரொடிக்கை தோற்கடித்து சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

## எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று தங்கம் வென்று காதலுக்கு மரியாதை செய்வேன்

### பெடரர்

ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பது, பதக்கம் வெல்வது என்பது அனைத்து விளையாட்டு வீரர்களின் வாழ்நாள் சாதனையாகக் கருதப்படுகின்றது. ஆனால் சுவிற்சர்லாந்தின் டென்னிஸ் வீரர் ரோஜர் பெடருக்கு ஒலிம்பிக் போட்டி வாழ்க்கையே தந்துள்ளது என்று கூறலாம். 2000ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கத்தை இழந்தார். ஆனால் தனது கேர்ள் பிரண்டைக் கண்டார். தற்போது எதென்ஸ் ஒலிம்பிக்கில் அதன் நான்காவது ஆண்டைக் கொண்டாட உள்ளார் 22 வயதாகும் பெடரர். 3 கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் உட்பட 18 பட்டங்கள் வென்றுள்ளார். அவற்றின் மூலம் ரூபா 50கோடியைப் பெற்றுள்ள பெடரருக்கு சிட்னி ஒலிம்பிக் போட்டி மறக்க முடியாத போட்டி. தற்போது உலகத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள பெடரர் சிட்னி ஒலிம்பிக்கின் அரையிறுதியில் ஜேர்மனியின் டாமி ஹாஜிடம் தோற்று வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் பிரான்சின் ஆர்நாட்டி பாஸ்கிலிடம் தோற்றேன். ஆனால் எனது காதலியைக் கண்டேன். இந்த முறை தங்கம் வென்று காதலின் நான்காவது ஆண்டை கொண்டாட விரும்புகின்றேன் எனத் தெரிவித்துள்ளார் டென்னிஸ் வீரர் பெடரர்.

## குறுந்தூர ஓட்ட வீரர் ஹரிசன் ஒலிம்பிக் வாய்ப்பை இழந்தார்

அமெரிக்காவைச் சேர்ந்த குறுந்தூர ஓட்ட வீரர் ஹெல்வின் ஹரிசன் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழந்துள்ளார்.

தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து தொடர்பான சட்ட திட்டங்களை இரண்டாவது தடவையாகவும் அவர் மீறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹரிசன் இதன் மூலம் சர்வதேச தடகளப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு இரண்டாண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## 86 நாடுகளைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் ஒலிம்பிக் நகரம் சென்றடைந்தனர்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாவதற்கு இன்னும் சில நாட்களே இருக்கின்றன.

இவ்வருட ஒலிம்பிக் போட்டிகளில் மொத்தமாக பங்குபற்றவுள்ள 200 நாடுகளில் 86 நாடுகளைச சேர்ந்த வீரவீராங்கனைகள் ஒலிம்பிக் நகரத்தை சென்றடைந்துள்ளனர்.

தத்தம் நாடுகள் சார்பாக வீரவீராங்கனைகளை அழைத்துச் சென்றுள்ள பொறுப்பதிகாரிகள் போட்டிகளுக்காக விளையாட்டு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ள விதம் குறித்தும் தமது திருப்தியை வெளியிட்டுள்ளனர்.

போட்டிகளுக்கு முன்பாக பாதுகாப்பு விடயம் குறித்து.அவுஸ்திரேலியா விமர்சித்திருந்தது. எனினும் எதென்ஸ் நகரில் இதுவரை எந்த வித பிரச்சினைகளோ அல்லது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலோ தென்படவில்லை என அவுஸ்திரேலிய ஒலிம்பிக்குழுத் தலைவர் கூறியுள்ளார்.




தென்னாபிரிக்க- சிறிலங்கா டெஸ்ட் போட்டி இன்று காலியில் ஆரம்பம்.

## ஆனந்த் சம்பியன்

உலகின் இரண்டாம் நிலை ஆட்டக்காரரும் இந்தியாவைச் சேர்ந்தவருமான விஸ்வநாதன் ஆனந்த் ஜேர்மனியில் நடைபெற்ற ஸ்பார்கசன் டார்ட்மன்ட் செஸ் போட்டியில் பட்டம் வென்றார். ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இவர் ரஷ்யாவைச் சேர்ந்த விளாடிமிர் கிராம்னிக்கை 2.5-1.5 என்ற புள்ளிக் கணக்கில் தோற்கடித்தார். முதல் சுற்று இறுதி ஆட்டங்கள் இரண்டுமே சமநிலையில் முடிந்ததால் ராபிட் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஏ.டி.பி மாஸ்டர்ஸ் தொடர் போட்டி பயஸ், பூபதி ஜோடி சம்பியன்



ரொரண்டோவில் நடைபெற்ற ஏ.டி.பி மாஸ்டர்ஸ் தொடர் போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளது. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்திய ஜோடி 6-4, 6-2 என்ற நேர் செட்களில் தரவரிசையில் 2 ஆம் இடத்தில் இருந்த ஜோன்ஸ் பிஜோர்க்மன் (சுவீடன்), மாக்ஸ் மிர்ன்யி (பெலாரஸ்) ஜோடியைஅதிர்ச்சிதோல்வியடையச் செய்தது. இப்போட்டியில் இந்திய ஜோடி வெல்லும் 5 ஆவது பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. 7 ஆண்டுகளுக்கு முன்பு இதே போட்டியில்தான் சம்பியன் பட்டத்துக்கு இந்திய ஜோடி பிள்ளையார் சுழி போட்டது.மொத்தத்தில் இந்திய ஜோடி வெல்லும் 23 ஆவது பட்டமாக இது அமைந்துள்ளது. கருத்து வேறுபாடு காரணமாக வேறு நாட்டவர்களுடன் இணைந்து பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வந்தனர். சுமார் 2 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இணைந்து இப்போட்டியில் பங்கேற்றனர். இப்போட்டித் தரவரிசையில் முன்னிலையில் இருந்த பல்வேறு ஜோடிகளைத் தோற்கடித்து பட்டம் வென்றுள்ளது. அவர்களது 'ஆட்ட இணை' உறுதியாக உள்ளதை வெளிப்படுத்தியுள்ளது. இப்போட்டியில் பயஸ்,.பூபதி சோடி தரவரிசையில் 8 ஆவது இடத்தில் இருந்தனர். இவ்வெற்றி மூலம் இருவரும் தலா 500 புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

### சிந்தனைக்கு



பயிற்சி-தந்திரம்-துணிவு இந்த மூன்றும் ஒரு படையணிக்கு அமையப் பெறுமாயின் வெற்றி நிச்சயம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 04-08-2004
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## வீதியில் அனாதரவாக...!

'புளொட் மோகன' சுட்டுக் கொல்லப்பட்டமை குறித்து சிறிலங்கா அரச தரப்பில் எவருமே அலட்டிக் கொண்டதாகக் காட்டிக் கொள்ள வில்லை. சிறிலங்கா புலனாய்வுத்துறைக்கு புளொட்மோகன் போன்று காட்டிக் கொடுத்தலில் துணைபுரியக் கூடிய வேறொரு வரைத் தேட இயலாது எனக் கூறப்படும் அளவிற்கு இன விரோ தியாகச் செயற்பட்டு சிறிலங்கா அரசின் பயங்கரவாதச் செயலுக்கு உதவியவரான புளொட் மோகன் நடுவீதியில் கைவிடப்பட்டார் என்றே கூறலாம்.

புளொட்மோகன் சுட்டுக் கொல்லப்பட்டமையானது சிறிலங்கா புலனாய்வுத்துறைக்கும், இராணுவத் தரப்பிற்கும் பெரும் இழப் பென்பது வெளிப்படையானது. இதனைக் கடந்த காலத்தில் புளொட் மோகன் சிறிலங்கா புலனாய்வுத்துறைக்கும், இராணு வத்தரப்பிற்கும் ஆற்றியதாக வெளியாகியுள்ள தகவல்களே வெளிப் படுத்தப் போதுமானதாக இருந்தன. மறைமுகமாக சிறிலங்கா இராணுவமும், புலனாய்வுத்துறையும் புளொட் மோகனுக்கு வழங்கிய ஆதரவு, பாதுகாப்பு என்பவையும் இதனை வெளிப்படுத்தப் போது மானதாகும்.

புளொட்மோகன் தனிப்பட்ட ரீதியிலும், சிறிலங்கா புலனாய் வுத்துறையுடனும் இராணுவத்துடனும் இணைந்து மேற்கொண்ட படுகொலைகள், இனஅழிப்பு நடவடிக்கைகள் என்பன மிகப் பெரிது. கிழக்கில் நடந்த சுமார் 1000 வரையிலான படுகொலைகளுடன் புளொட் மோகனுக்குச் சம்பந்தம் உண்டு என வெளியாகும் தகவல் கள் ஊர்ஜிதம் செய்கின்றன.

இந்தவகையில் நேரடியாகவும் ஆயுதப்படைத்தரப்பிற்கும், புலனாய்வுத்துறைக்கும் துணையாக இருந்த புளொட் மோகனை இன்று சிறிலங்கா அரசோ, இராணுவத்தரப்போ, புலனாய்வுத் துறையோ கண்டு கொண்டதாக இல்லை இவர் தம்முடன் தொடர்புள் ளவர் தம்முடன் இணைந்து செயலாற்றியவர் என்று கூடக் கூறு வதற்குத் தயாராக இல்லை.

சிறிலங்கா அரசோ புளொட்மோகன் என்பவரைப் பற்றித் தமக்கு எதுவுமே தெரியாது எனக் கூறுகின்றது. இராணுவத்தரப்போ புளொட்மோகனுடன் தமக்கு தொடர்பு எதுவும் கிடையாது எனக் கைவிரிக்கின்றது. மட்டக்களப்பு மையப்பகுதியில் இராணுவ முகா முடன் இணைந்ததானதொரு முகாமில் இருந்து புளொட் மோகன் செயற்பட்டதையும், இனஅழிப்பிற்கு தமிழர் இளைஞர்கள்–யுவதிகள் மீதான சித்திரைவதைகளைப் புரிந்ததையும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியதையும் அது மறந்து விட்டது.

சிறிலங்கா புலனாய்வுத்துறையும், புளொட்மோகன் தம்மிடம் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருப்பதையும் புலனாய்வுத் துறையில் பணியாற்றியதையும் மறுக்கின்றது. சிலவேளை அவர் ஒற்றர் ஒருவராக இருந்து புலனாய்வுத்துறைக்குத் தகவல்களை வழங்கியிருக்கலாம் எனப் புலனாய்வுத்துறையும் 'புளொட்மோகன' செய்த பணியை மறைத்துவிட்டது.

ஆனால் இத்தனைக்கும் 'புளொட் மோகன' புரிந்த அன்றி உதவிய படுகொலைகள், சித்திரவதைகள், அழிப்பு நடவடிக்கைக ளென ஒரு சிங்களப் புலனாய்வுத்துறை அதிகாரியோ அன்றி இராணுவ அதிகாரியோ புரிந்திருப்பின் இவர்கள் இன்று தேசத்தின் பாதுகாவலர்களாகவும், தேசவிமானிகளாவும் போற்றப்பட்டிருப் பார்கள், பாராட்டப்பட்டிருப்பார்கள் உயர் பதிவிகளும், பட்டங்களும் கிடைக்கப் பெற்றவையாகியிருக்கும் சிலை கூட வைக்கப்பட்டி ருக்கலாம்.

ஆனால் புளொட் மோகன் கொல்லப்பட்டபோது அவரை இப் பணிக்கு அமர்த்தியவர்கள் அவரின் பணியால் நன்மைய டைந்தவர்கள் எவருமோ அதனைக் காட்டிக் கொள்ளவில்லை. சிலர் வீதியில் கிடந்த சடலத்தை வந்து பார்வையிட்டு புளொட் மோகன் தான் கொல்லப்பட்டரா எனத் தமக்குள் ஊர்ஜிதப்படுத்திக் கொண்டதுடன் சரி ஓர் இரங்கலைக் கூட அவர்கள் தெரிவித்ததாக இல்லை.

இங்கு இதனைக் கூறுவதானது புளொட் மோகனுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் படைத்துறையினர் அஞ்சலி செய்யத் தவறி விட்ட னர் என்பதற்காகவே இரங்கல் தெரிவிக்காது விட்டுவிட்டனர் என் பதற்காவோ அல்ல இனத்துரோகிகள் இவ்வாறு வீதியில் வீழ்ந்துகிடக்கும் போது எவரும் கண்டு கொள்ள மாட்டார்கள் என்பதற்காகவே அதாவது இவர் வேண்டி உண்டவர்களும் சரி இவரிடம் உண்டவர்களும் சரி தம்மை வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார்கள் என்பதற்காகவே, இது இனத் துரோகிகளாகச் செயற் படும் அனைவரும் சமர்ப்பணமாகத்தக்கது.

ஆனால் இதற்குப் புளொட் மோகனின் நிகழ்வு மட்டும் தான் எடுத்துக்காட்டு என்பதல்ல. இனத்துரோகிகள் பலர் இவ்வாறு வீதிகளில் வீழ்ந்து கிடந்த போது மக்கள் எவருமே கண்டு கொண்டதில்லை. இவர்களை யார் கொன்றார்கள் ஏன் கொன் றார்கள் என்பதைக் கூட அவர்கள் பெரிதாக ஆய்வு செய்வதில்லை இவர்கள் சொல்லப்படுவார்கள் என்பது மட்டுமே மக்களுக்கு தெரிந்ததொன்றாக இருக்கின்றது இதனால் இம்மரணங்கள் குறித்து அவர்கள் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனெனில் இவை எதிர் பார்க்கப்படுபவையாகவே அவர்கள் மனங்களில் இருந்துள்ளன. ஏனெனில் இத்துரோகிகள் அனைவரும் மக்களால் வெறுக்கப் பட்டவர்களாக இருந்தனர்.

# கிளி. பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டமை

# எமக்கு ஏமாற்றத்தை தந்துள்ளது

### -சனாதிபதி சந்திரிகாவுக்கு மகஜர்

அரசதுறைகளில் பொருத்தமான வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்கான நேர்முகத்தேர் வின் அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனத்தில் கிளிநொச்சிப் பட்ட தாரிகள் முற்றுமுழுதாக புறக் கணிக்கப்பட்டமை எமக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது. நீண்ட காலம் நடைபெற்ற யுத்த நெருக் கடிகளுக்கும், பொருளாதார தடை களுக்கு மத்தியில் கல்விகற்று பல்கலைகழகத்தில் பட்டம் பெற்ற எமது மாவட்ட பட்டதாரிகளைப் புறக்கணித்தமைக்கான காரணம் என்ன? இவ்வாறு கிளி.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றி யம் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு நேற்று அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவுட்டங்களில் 1999,2000 ஆண்டுகளில் இருந்து பட்டம் பெற்றவர்கள் வேலை யின்றி இருக்கும் நிலையில் ஏனைய மாவட்டங்களில் 2003ஆம் ஆண்டுகளிலும் பட்டம் பெற்ற வர்களுக்கு நியமனம் வழங்கி யமை தங்கள் அரசின் பாரபட்ச போக்கினை எடுத்துக் காட்டுவ துடன், திட்டமிட்ட நடவடிக்கையா கவே கருதவேண்டியுள்ளது. நீண்ட கால நோக்கை அடிப்படையாக வைத்து வன்னி மாணவர்களின் கல்வி மற்றும் பொருளாதார துறையில் வீழ்ச்சிப்போக்கினை ஏற்படுத்தும் உள்நோக்கம் ஏதும் உண்டா? என்ற சந்தேகத்தையும் எம் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது?

தங்களின் தலைமையில் புதிய அரசாங்கம் பொறுப்பேற்று விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இச் சந்தர்ப் பத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட் டங்களில் எவருக்கும் நியமனம் வழங்கப்படாமையானது தங்கள் அரசின் பாரபட்ச போக்காகவே நாம் கருதவேண்டி உள்ளது. எனவே எமது மாவட்ட பட்டதாரி களின் நியமனத்தில் பாரபட்ச மின்றி செயற்பட வேண்டும் எனக் கோருவதுடன் சாதகமான பதிலி னையும் கோரி நிற்கின்றோம். இந் நிலையில் தங்களிடம் இருந்த சாதகமான பதில் கிடைக்காவிட் டால் தொடர்ச்சியான வெகுசனப் போராட்டங்களில் எமது பட்டதாரி கள் ஈடுபடுவது தவிர்க்க முடியாத தாகும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதன் பிரதிகள் சிறிலங்கா நிதியமைச்சர், பணிப்பாளர் நாய கம், முகாமைத்துவப்பிரிவு ஆகி யோருக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

# வெளிநாட்டு நிறுவனங்களுக்கான மானியங்கள் நிறுத்தப்படும்

### - நிதிஅமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கும் மானியங்கள் படிப்படி யாக நிறுத்தப்பட்டு அந்த நிதியை நாட்டின் அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தப் போவதாக நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித் துள்ளார்.

செல் நிறுவனத்திற்கு வழங் கப்பட்ட மானியமும் இந்த அடிப்ப டையில் நிறுத்தப்பட்ட தென்றும் மேலும் வெளிநாட்டு நிறுவனங் களுக்கு மானியம் வழங்குவதில் எமக்கு எந்தப் பயனும் கிடையாது எனவும் அவர் கூறினார். எனவே தற்பொழுது வெளிநாட்டு நிறு வனங்களுக்கு வழங்கப்படும் மானி யங்கள் நிறுத்தப்பட்டு அந்த நிதியை இளைஞர் வேலை வாய்ப் புக்களுக்கும், குளங்கள் புனர மைப்பு, வீதி திருத்தம் போன்ற வைகளுக்கும் வழங்கப்படுமென நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### - காலிப் பகுதியில் -

# இராணுவத்தினர் அட்டகாசம் ஐந்துபெண்கள் படுகாயம்

(கொழும்பு)

இராணுவ லெப்ரினனட் ஒரு வரும் சில சிப்பாய்களும் நடாத்திய தாக்குதலினால் ஐவர் படுகாயம் அடைந்துள்ளனர். நேற்று முன்தினம் காலி-பூசா இராணுவத் தலைமை யகத்தைச் சேர்ந்த இந்த இராணு வக் குழுவினர் உணவற்றுன, மதறபா ஆகிய பகுதிகளில் துப் பாக்கிச்சூடு நடாத்தி அச்சுறுத் தியதுடன் அப்பகுதியில் இருந்த வீடொன்றை உடைத்துச் சென்றும் தாக்குதல் நடாத்தினர்.

இதன் போது அவ்வீட்டில் இருந்த ஐந்து பெண்கள் காயம டைந்து காலி-கற்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

# ஜே.வி.பி. யிடமிருந்து பறிக்கப்பட்ட அமைச்சுப்பிரிவுகள் ஒப்படைப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியின்வசம் உள்ள விவசாய அமைச்சில் இருந்து சனாதிபதியால் பொறுப் பேற்கப்பட்ட சில திணைக்களப் பிரி வுகளை மீண்டும் அந்த அமைச் சுக்கே ஒப்படைக்க சனாதிபதி இணங்கியுள்ளார். அண்மையில் இந்த அமைச்சின் இரண்டு திணைக்களங்களின் 5 பிரிவுகளை சனாதிபதி பொறுப்பேற்று சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் செய லரான மைத்திரிபால சிறிசேனவின் ஆற்றுப்படுகை அமைச்சிடம் ஒப்படைத்திருந்தார்

இதனையடுத்து ஜனாதிப திக்கும்,மக்கள் விடுதலை முன்ன ணிக்கும் இடையில் பாரிய முறு கல் நிலை ஏற்பட்டிருந்தது இதன் காரணமாக அண்மையில் சனாதி பதி தாய்லாந்து சென்ற போது அவருடன் செல்லாத மக்கள் விடு தலை முன்னணியினர் வேறாகவே அங்கு சென்று பிம்டெக் மாநாட்டில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

(32)

# பௌத்த பிரச்சாரத்திற்கு வெளிநாடு சென்று இறைச்சிக்கடைகளில் வேலை செய்யும் பிக்குகள்

### -அஸ்கிரிய பீட மகாநாயக்கர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் செல்லும் இளம்பிக்குகள் தாம் சென்ற நோக் கத்தை கைவிட்டு பணம் உழைப் பதிலேயே குறியாக உள்ளனர் என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் சிறிபுத்தரகித்த தேரர் தெரிவித் துள்ளார். அஸ்கிரிய மகாவிகாரை யில் நடைபெற்ற விழா வொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரி விக்கையில் தேரவாத பௌத் தத்தின் பிரச்சாரத்திற்காக ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுக ளுக்கு அனுப்பப்படும் இளம் பிக்குகள் தாம் அங்கு சென்ற நோக்கத்தைக் கைவிட்டு, பிக்கு அங்கியை ஒருபுறத்தில் வைத்து விட்டு சிறிய சிறிய தொழில்கள் செய்து பணம் உழைத்து வரு கின்றனர்.

முன்னதாக குறித்த பிக்குகள் மேற்படி நாடுகளுக்குச் செல்வதற் கான விசா பெறுவதற்கு மகா நாயக்க தேரரிடமே கடிதம் பெறு கின்றனர்.

ஆனால் நாங்கள் அந்த நாடுக ளுக்குச் சென்று இப்பிக்குளைப் பற்றி விசாரிக்கின்றபோது இவர்கள் காணாமற்போய் விடுகின்றனர். சிலர் கராஜ்களில் வேலை செய்கின்றனர். சிலர் வீதிகள் கூட்டி பெருக்குகின் றனர். இன்னும் சிலர் இறைச்சிக்க டைகளில் வேலை செய்கின்றனர். இவற்றைத் தொடர்ந்து பௌத்த விவ காரங்கள் திணைகளம் குறித்த நாடுகளுக்கு விசா பெறுவதற்கான கடிதங்கள் வழங்க வேண்டாம் என எம்மைக் கோரியுள்ளது என்றும் புத்திரகித்த தேரர் கூறியுள்ளார்.

## வவுனியாவில் புலிகள் - பொலிசார் சந்திப்பு

# அரசியல் போராளிகளைச் சோதனையிட பொலிசார் விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

(செட்டிகுளம்)

சாதாரண பொதுமக்கள் போன்று வவுனியாவில் விடுதலைப்புலிகளின் அரசியல் போராளிகளும் சோதனை இடப்பட வேண்டும் என சிறிலங்காப் பொலிசார் விடுத்த வேண்டுகோளுக்கு வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றினை நேற்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஏற்பாடு செய்திருந்தது.

எனினும், இதற்கு இராணுவத்தினர் சமுகமளிக்காமையினால் சந்திப்பு ரத்துச் செய்யப்படவிருந்த சமயத்தில் பொலிசார் விடுதலைப்புலிகளுடன் சந்திப்பு மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்ததற்கு அமைவாக நேற்று வவுனியா மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மிஸ்கின், பொலிஸ் அதிகாரி கஸ்தூரி ரட்ணா ஆகியோர் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி. ஞானவேலுடன் கலந்துரையாடினர்.

இதில் பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. முக்கியமாகத் தற்போது வவுனியாவில் இடம்பெற்று வரும் கொலைகளை அடுத்து வவுனியாவின் பாதுகாப்பும் வீதி ரோந்து நடவடிக்கையும் அதிகரித்திருப்பதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

மேலும் சாதாரண பொதுமக்கள் போன்று விடுதலைப்புலிகளின் அரசியல் போராளிகளையும் வீதிச் சோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனப் பொலிசார் விடுத்த கோரிக்கைக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் தி. ஞானவேல் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார்.

போராளிகள் வன்னிப் பகுதியில் இருந்து வரும் போது ஓமந்தையில் உடற்சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின் தான் வருகின்றனர். எனவே, பொலிசாரின் கோரிக்கைக்குத் தான் அனுமதிக்கப்போவது இல்லையென ஞானவேல் உறுதிபடத் தெரிவித்தார். இதேவேளை, வன்னி இராணுவத் தளபதி இட மாற்றம்பெற இருப்பதாலேயே இராணுவம் இச்சந்திப்பில் கலந்து கொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மார்ச் சந்திப்பில் வவுனியாவின் கோதண்டான், நொச்சிகுளம், இரணை இலுப்பைக்குளம், கல்மடு போன்ற பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராயப்பட்டு அதற்கானதிகதியைத் தருவதாக இராணுவம் தெரிவித்ததாகவும், எனினும் அவ்வாறு நடைபெறாமையினால் இதற்கான சந்திப்பை விரைவாக ஏற்படுத்தித் தருமாறு தான் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் வவுனியா அரசி யல்துறைப் பொறுப்பாளர் தி. ஞானவேல் தெரிவித்துள்ளார். (21)

# பூநகரி குடமுருட்டிப் பாலம் பாரஊர்தி சென்றவேளை உடைந்தது

(அலுவலகசெய்தியாளர்)

பூநகரி செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள குடமுருட்டிப் பாலம் உடைந்த நிலையில் அப்பகுதியூடான பயணங்கள் யாவும் ஸ்தம்பிதமடைந்தது.

நேற்று காலை பூநகரியில் இருந்து எரு ஏற்றிய வண்ணம் பயணித்த பார ஊர்தி ஒன்று பிரதான வீதியில் அமைந்துள்ளகுடமுருட்டிப் பாலத்தைக் கடக்க முற்பட்ட வேளை பாலம் ஏற்கனவே சேதம் அடைந்திருந்தமையினால் பார ஊர்தியின் பாரத்தைத்தாங்க முடியாமல்



திடீரென உடைந்து பாரஊர்தி பாலத்திற்குள் அகப்பட்டுக்கொண்டது.

இதனால் அப்பகுதி ஊடாகப் பயணம் செய்யும் வாகனங்கள் பாலத்தைக் கடக்க முடியாத நிலை ஏற்பட்டது. இருப்பினும் சிரமத்தின் மத்தியில் சிறிய வாகனங்கள் பாலத்திற்கு அருகாமையில் புதிய ஓர் பாதையூடாக நீரினைக் கடந்து செல்லப் பெரிய வாகனங்கள் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக பேருந்துப் பயணிகள் சேதமடைந்த பாலத்திற்கு இருபகுதியிலும் வைத்து வேறு வேறு பேருந்துகள் மூலம் பிரயாணம் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

இப்பாலத்தினை உடனடியாக திருத்தும் படி சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் தற்காலிக வீதி அமைக்கும் பணிகள் உடன் ஆரம்பிக்கப்பெற்று நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது வாழைச்சேனையில் கைக்குண்டு வீச்சு

### ஈ. பி. டி. பி. யினர் உட்பட ஐவர் காயம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை ஈ.பி.டி.பி அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் நான்கு ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு வாழைச்சேனை நகரில் உள்ள ஈ.பி.டி.பி அலுவலகம் மீது நேற்றுக்காலை இந்தறைபிள் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கிழக்குமாகண பிரதி பொலிஸ்மா அதிபர் நெவில் விஜய சிங்க தெரிவித்தார்.

மேற்படி கிரனேட் வீச்சிற்கு இலக்காகிக் காயமடைந்த ஈ.பி.டி.பியினரின் பெயர் விபரங்கள் வருமாறு முகாமின் பொறுப்பாளரான சிவா என அழைக்கப்படும் அந்துளன் கந்தசாமி, கிருஷ்ணசாமி கிருஷ்ணராஜா, முகமது சமீன், மீறா முகைதீன் முசைதீன் ஆகியோரும் சிறிலங்காப்பொலிஸ் உத்தியோகத்தரான நிரோஜன் ஆகியோரே காமடைந்தவர்களாவர்.

## பட்டதாரிகள் கவனத்திற்கு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய வேலையற்ற பட்டதாரிகள் அனைவரும் தங்களது பட்டச் சான்றிதழின் மூலப் பிரதிகளுடன் கிளி/ மாவட்டச் செயலகத்திற்கு இன்று காலை 9.00 மணிக்கு சமுகம் தருமாறு கிளி/ மாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### பட்டதாரிகளின்...

தலத்திலிருந்து அலுவலக வாகனத்தில் செயலகத்திற்கு வருகை தந்த பொழுதும் செயலக நுழைவாயிலில் வைத்து அரசஅதிபர் உட்செல்ல மறியல் போராட்டத்தில் ஈடுபட் டோர்களினால் அனுமதிக்கப் படவில்லை.

இதன் காரணமாக திரும்பிச் சென்ற அரச அதிபர் நண்பச 12.00 மணிக்கு நடைபெற்ற பட்டதாரிகளின் மகஜர் கையளிப்பில் கலந்து கொண்டு மகஜர்களைப் பெற்றுக்கொண்டதன் பின்பாகவே செயலகத்தினுள் செல்வதற்கு போராட்டம் நடத்தியோர் அனுமதித்தனர்.

மகஜர் கையளிப்பு செயலக நுழைவாயிலில் வைத்தே இடம் பெற்ற தென்பது குறிப்பிடத்தக்கது.

சாதகமான பதில்கள் ஓரிரு தினங்களில் கிடைக்கத்தவறும் பட்சத்தில் மாவட்டரீதியாக தொடர் மறியல் போராட்டங்கள் இடம்பெறு மென கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ.கு)

### முல்லை...

இதேவேளை தாம் அரசினால் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டமை தொடர்பாக நேற்று முல்லை மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தள்ளனர். (08)

### தமிழீழ...

பொலிஸ் உத்தியோகத்தர்களின் பதவியுயர்வுக்கு அங்கீகாரம் அளித்ததாக அவர் முன்னணி அரசாங்கத்தை குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை பிரதி அமைச்சர் மகிந்தானந்த அலுத்கம விடுதலைப்புலிகளுடன் போரிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளனர் என அதிருப்தி வெளியிட்டார். ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே சனாதிபதி தனது பாதுகாப்புப் பிரிவிற்கு பல பாதாள உலகத்தவரை நியமித்துள்ளார் என குற்றம் சாட்டியுள்ளார்.

ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தனது குற்றச் சாட்டில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பொலிஸ் படையில் பரவலான ஒழுங்கீனங்கள் இருந்தன என்றுள்ளார்.

### இ.த.க...

இந்த நிலையிலேயே சனாதிபதியும் தாம் ஒரு போதும் இடைக்கால நிர்வாகம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த தயாரென கூறவில்லை என குறிப்பிட்டார்

இதனை அடுத்து இனிவரும் காலப்பகுதியில் இடைக்கால நிர்வாகம் தொடர்பில் அரசாங்கத்தின் சார்பில் மாத்திரமே கருத்தக்கள் வெளியிடப்படும் எனவும் தனியாக எவரும் கருத்துக்களை வெளியிடுவதில்லை என்றும் இக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது

இதேவேளை பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சி நிரலில் சரியான முறை பின்பற்றப்படவில்லை என மக்கள் விடுதலை முன்னணியினர் குற்றம் சுமத்தினர்.

இந்த முறையில் திறந்த நிலை கொள்கை அவசியம் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். (32)

### ஹண்டர்...

விரோதமாக மணல் ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை வீதியால் யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த ஹன்டர் சாரதி தன்னுடன் துணைக்கு வந்த மற்று றொருவருக்கு வாகனத்தை ஓட்டக்கற்றுக் கொடுத்துள்ளார். இதனால் சீராக பயிற்சி பெறாத ஹண்டர் சாரதியின் உதவியாளர் வாகனத்தை கட்டுப் படுத்த முடியாது தடுமாறி அவ் வழியால் துவிச்சக்கர வண்டி யில் சென்றுகொண்டிருந்த பிரஸ்தாப நபரை மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. (33)

### சமாதான...

யோசனையினை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருந்ததெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்த தாமும் தயாராக இருப்பதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருந்தார்.

ஆனால், மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச அவ்வாறு மேற்கொண்டால் கூட்டமைப்பு அரசாங்கம் கவிழ்ந்து விடும் என எச்சரித்தார். அந்தச் சூழ்நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி சனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றக் கூட்டத்தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு அவர் கூறினார்.

### புதுக்குடி...

பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.சரவணபவன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர். மேலும் அரங்க நிகழ்வுகளாக தமிழ்தினப் போட்டியில் முதலிடத்தைப் பெற்ற நிகழ்வுகளுடன் இன்னும் பல நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

இவ் தமிழ்விழாவை ஒட்டி புதுக்குடியிருப்பு வீதிகளில் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டி அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வானது புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஓர் பிரமாண்டமான முறையில் இடம் பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் விழாவை ஒட்டி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.கனகரத்தினம் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இயல் இசை நாடகம் என்ற எங்கள் தமிழுக்கு எத்தனை தான் துன்பம் வந்தும் அத்தனையும் தாண்டி எங்கள் தலைவர் தமிழை வளர்த்து நிற்கின்றார். சங்கே முழங்கு சக்கரம் செய்து வா என்ற பண்டைத் தமிழ் ஒலி மீண்டும் கேட்கிறது. அண்டைய நாடுகளில் எல்லாம் தமிழ் மொழியின் சிறப்பைக் கண்டு வியக்கின்றார்கள். தமிழர்களைக் கொன்றாலும் தமிழ் மொழியைக் கொல்ல முடியாது. என்பது நிலைப்பாடாகிவிட்டது. இந்த உயர்வுக்காய் ஈகம் செய்த மாவீரச் செல்வங்களை இந்நேரம் நினைவில் கொள்கின்றோம். அந்த செந்தமிழை எம்தமிழை வளர்ப்பதற்கு ஒரு வழி அது பெருவிழா. முல்லைக் கல்விக் குழாந்தின் இப் பணிக்கு என் வாழ்த்துக்கள். தமிழ் சிறப்பான தென்றும் தமிழ் மொழி வளர வேண்டும் தலைவன் புகழ் ஓங்க வேண்டும் தரணி யெங்கும் தமிழ் மணம் வீசவேண்டும். (08)


# கேள்வி அறிவித்தல்

**கீழ்க்காணும் வேலைக்கான கேள்வி கிளி. மாவட்ட செயலக கேள்விச் சபையால் கோரப் பெறுகின்றது. இது சம்பந்தமான விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

**01. இயக்கச்சி, பச்சிலைப்பள்ளி வீதி திருத்த வேலை.**

கேள்விப்பத்திரங்கள் 2004. 08.18 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திர முடிவுநாள் 2004.08.19 ஆம் திகதி காலை 10.00 மணிவரை.

தி. இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.1005)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.